www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

Raya

# தூண்டில்



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 34

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வை

# தூண்டிலின் போக்கு

தூண்டிலின் மீது வைக்கப் படுகின்ற விமர்சனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. எல்லா இயக்கங்களையும் நிராகரிக்கும் விமர்சனம். அதுவும் வெறுமனே விமர்சித்துக் கொண்டிருத்தல். ஆனால் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் கிடையாது.

2. விமர்சிக்கும் தகுதி தூண்டிலுக்கு இல்லை. நாட்டைவிட்டு ஓடிவந்தவர்கள், நாட்டிலே இரத்தம் சிந்திப் போராடுபவர்களை எப்படி விமர்சிக்க முடியும்?

3. புலி எதிர்ப்பு, அராஜகம், கொலை... போன்ற பாதகமான அம்சங்களை மட்டுமே பார்ப்பது, பத்திரிகைக்கு வெளியே எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் கவனமெடுக்காதது என்பனவே தூண்டிலின் தன்மை. இது துரோகம்–எமது போராட்டத்திற்கு எதிரிடை – நிலை எடுப்பதற்கு சாதகமானது.

இந்த மூன்று விமர்சனங்களிலும் அடிப்படையாக இருப்பவைகள் அல்லது இவை மூலம், இவற்றை முன்வைக்கின்ற வாசகர்கள் எதிர்பார்ப்பவைகள் என்ன என்று ஆராய முற்படுவதன் மூலமே விமர்சனத்தின் வெளிப்படும் முறைக்குப் பின்னால் ஏதாவது நியாயம் இருக்கிறதா என இனங் கண்டுகொள்ள முடியும்.

எங்களைப் பொறுத்தவ–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரையில் இந்த விமர்சனங்கள் எழுவதற்கான காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்என நினைக்கின்றோம்.

1. இன்று தேக்கத்திற்குள்ளாகியுள்ள எமது போராட்டத்தின் செல்நெறி என்ன என்பது தெளிவற்றதாகவேயுள்ளது.
2. தேசிய விடுதலை சாதிக்கப்படக் கூடியதற்கான திட்டமான கொள்கை, நடைமுறைத் திட்டங்கள் முன்வைக்கப்படாமல் அதுமனம் போனபோக்கில் சென்று-கொண்டிருப்பது.
3. போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு என்ன என்பது பற்றிய தெளிவின்மை.

இவற்றிலிருந்தான் கேள்விகள் எழுகின்றன.

தமிழீழத்தின் விடுதலைப்-போராட்டம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் இரண்டாவது முறையாகத் தேக்கத்திற்கு வந்தபோது, போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அனைத்துச் சக்திகளும் தம்மை மறுபரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய ஒரு தேவையை உணர்ந்துகொண்டனர்

தேசிய விடுதலைக்கான இத்தனைநாள் இயக்கமானது-

1. சனநாயக மறுப்பாலும்,
2. எதிரி, நண்பர் பற்றிய திட்டவட்டமான மதிப்பீடுகள் இன்றியும்,

இலங்கையிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. மாறிவருகின்றசூழலைப்பொறுத்து சக்திகள் எவ்வாறு அணிதிரள்கின்றன என்பது பற்றிய கணிப்பு இல்லாமையினாலும்-

அடிக்கடி தேக்கத்தைச் சந்தித்து வந்துள்ளது.

இவற்றிற்கான அடிப்படையானது, எமது போராட்டம் முன்கூட்டியே திட்டமிட்ட வகையில் உருவாக்கப்படாமல், நாற்பதாண்டுகால தமிழ்த் தேசியவாத- அலையின் அடுத்த கட்டத் தொடர்ச்சியாக வெடித்த ஆயுதப் போராட்டமாக, ஒரு வகையில் எதிர்ப்புப் போராட்டமாக, வெளிப்பட்டதிலிருந்தே உருவாகிறது.

எதிர்ப்புப் போராட்டம் சிங்கள பௌத்த தேசிய வெறியினை எதிர்த்த எழுபதுகளுக்கு முன் நடந்த போராட்டத்தின் தோல்வியும், தேக்கமும் ஏற்படுத்திய ஒரு நிச்சயமற்ற நிலைக்குக் காரணமாக தேசியவாத போராட்டத்திற்கு அதுகாறும் தலைமை வகித்த கூட்டணியினரின் ஆற்றாமையைக் குற்றம் சாட்டிக் கொண்டு, ஆயுதப் போராட்டத்தில் குதித்ததன் மூலம் எண்பதுகளின் நடுப்பகுதிவரை நகர்ந்து வந்தது.

ஆயினும் எதிர்ப்புப் போராட்டம் (RESISTANCE WAR) என்ற நிலைமையிலிருந்து அது அளவு மாற்றங்களுக்கு (ஆயுதப் போராட்டமாக) உட்பட்டதே ஒழிய எத்தகைய குணம்ச வேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை.

இதனால் இப் போராட்டம் 'தேசிய விடுதலைப் போராட்டம்' என்ற பரிமாணத்திற்கு விரிவுருததால் மீளவும் மீளவும் தேக்கத்தைச் சந்திப்பது தவிர்க்கமுடியாமல் உள்ளது.

ஒவ்வொரு தேக்கத்தின்-போதும் சக்திகள் அணி சேர்க்கையானது மாறி மாறி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இதைப் புரிந்து கொள்-ளாததில் இருந்து போராட்டத்திற்கான தோல்விகளை அவரவர் தமது சிந்தனைக்கேற்ப புரிந்துகொள்வதால் துரோகிகளும், எதிரிகளும், நண்பர்களும் - பொருத்தப்பாடின்றியே உருவாகுவதைக் காணலாம்.

உதாரணமாக, 85, 86 களில் இலங்கை இராணுவம் முற்றுமுழுதாக முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்த வேளையில், அதன் செயற்பாடுகள் தடுக்கப்பட்டிருந்தவேளையில் எதிர்ப்பு யுத்தம் ஒரு மாற்றத்தைக் - கோரி நின்றது.

எதிரிகள் இராணுவ ரீதியில் தற்காப்புநிலைக்கு ஓடிவிட்டிருந்தார்கள். இந்த நிலையில் போராட்டம் தேசிய விடுதலை போராட்டமாகப் பரிணமிக்க வேண்டிய தேவை இருந்தது.

அது பற்றிய புரிதல் எமது விடுதலை இயக்கங்களிடையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெளிவாக இருக்கவில்லை. தோன்றியிருந்த மாற்றத்திற்கான கோரிக்கை தேக்கமாக நீடிக்கையில் எதிர்ப்பு யுத்தமும் பல வீனமடையத் தொடங்கியது.

எதிர்ப்பு யுத்தம் உண்மையில் ஒருவகை தற்காப்பு யுத்தமே. இது தாக்குதல் உள்ள போது மட்டுமே உயிர்ப்புடையதாக இருக்கும்.

இராணுவம் முகாம்களுக்குள் இருந்தபின் தடுப்பு யுத்தத்திற்கு தேவையற்ற ஒரு நிலை உருவாகியது. இந்தக் காலம் அரசியல் முன் முயற்சியுடன் 'எதிர்ப்பு யுத்தத்தை' 'விடுதலையுத்தமாக்க' முயற்சி எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

அந்தக் கட்டத்தில் தேவைப்பட்டது 'ஐக்கியம்'. ஐக்கியம் மட்டுமே போராட்டத்தில் மக்களின் கையைப் பலப்படுத்தும்.

ஐக்கியம் எனும்போது அனைத்துக் கோட்பாட்டாளர்களும் தமது கோட்பாட்டை விட்டு ஒன்றுவதல்ல. ஆனால் யுத்தத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்க ஐக்கியப்படுவதாகும்.

ஆனால் அந்த ஐக்கிய முன்னணியின் தேவை நிறைவு செய்யப்படவேயில்லை.

போராட்டத்தின் நிகழ்கால நிலைமையை புரிந்துகொள்ளாததால் எதிர்காலத்தைத் திட்டமிட முடியவில்லை. புரிந்து கொண்ட ஒருசில சக்திகளால் முன்வைக்கப்பட்ட இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தேசிய விடுதலை யுத்தமாகப்போராட்டம் பரிணமிக்காமலே – போயிற்று.

இயக்கங்களுக்கிடையேயான மோதல் இந்தத் தேக்கத்தை உடைக்கக் கடைப் பிடிக்கப்பட்டது.

இது தேக்கத்தை மட்டுமல்ல, போராட்டம் பற்றிய மக்களின் உணர்விலும் வெடிப்பை ஏற்படுத்தியது.

இந்த உதாரணம் எந்த அரசியல் குழுவின் மீதும் நாம் அவதூறு சுமத்தவல்ல. மாறாக எமது போராட்டம் இருந்த நிலையை ஆராயவே எடுக்கப்படுகிறது. ஏனென்றால், அன்று புலிகள்தான் ஐக்கிய முன்னணிக்குத் தடையாக இருந்தார்கள் என்பது முழுக்க முழுக்கச் சரியானதல்ல.

போராட்டத்தில் வளர்ச்சி பெற்ற இராணுவ சக்திகளாக இருந்த எந்த சக்திகளுமே 'எதிர்ப்பு யுத்தத்தை' விடுதலை யுத்தமாக வளர்த்தெடுத்திருப்பதைப் பற்றி உணர்ந்திருக்கவில்லை. ஏனென்றால் அதற்கான அரசியல் பின்னணி வளர்த்தெடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆக, அன்றைய கட்டம் எதிரிகளை நண்பராகவும், நண்பர்களை எதிரிகளாகவும் இனங்கண்டதால் அநியாயமாக இழக்கப்பட்ட ஒரு கட்டமாகப்போனது.

www.tamilarangam.net

எமது போராட்டம் இந்தச் சந்தர்ப்பத்திலும், இதற்குப் பின்வந்த சந்தர்ப்பங்களிலும் – (இராணுவ வெற்றிகள் முக்கியமானவை அல்ல, அவை குணம்சரீதியான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.) சந்தித்தபோது புத்திசீவிகள் மத்தியில் பெரும் அதிருப்தியும், நம்பிக்கையின்மையும் வெளிப்பட்டது.

விரக்தியும், சோர்வும், தேக்க காலத்தில் தவிர்க்கமுடியாமல் தோன்றும் நோய்களே


இந்தப் புத்திசீவிகள் 'தேசவிடுதலையை' நேசித்தார்கள். 'சனநாயகத்தை' விரும்பினார்கள். அவற்றை வரவிடாமல் தடுக்கும் சக்திகளை இயல்பாகவே வெறுத்தார்கள்.

ஆனால் 'தேசவிடுதலையும்,' 'சனநாயகமும்' இவர்களின் பெரும்பாலானோருடைய மனதில் ஒரு 'அருவமான பிம்பமாகவே' இருந்தது.

அது குறித்த பொருண்மையான கருத்துகள் எதுவும் இவர்களிடமும் இருக்கவில்லை. இது சரி, பிழை என்பனகூட சார்பானவை என்பதை மறந்து விடும் போக்கிற்கு இட்டுச் சென்றது.

இதனால் மூன்று விதமான புத்திசீவிச் சிந்தனைப் போக்குகள் உருவாகின.

1. போராட்டம் சரிவராது. நடப்பது நடக்கட்டும்.
2. தூய்மைவாதம்; யார் என்ன தவறு செய்தாலும் தவறுதான் – 'நக்கீரம்' என்று சொல்லலாம்.



இலங்கையில் ஜனநாயகம்!!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. போராடுகின்ற சக்திகளை நாம் விட்டுக் கொடுக்கமுடியாது. அவர்கள்தான் ஏதாவது செய்கிறார்கள்.

இதில் முதலாவது வகையினரை விட்டுவிடுவோம். இன்னொரு போராட்ட அலை எழுச்சி வரும்வரை அவர்கள் இந்த இடத்தில் அவ்வளவு தீர்மானகரமானவர்கள் அல்லர்.

இரண்டாவது வகையினர்- தான் எமது போராட்டத்தின் நேரடியான-மறைமுக அனுபவங்களுடன் உருவான வாரிசுகள்.

எப்படி எமது போராட்டத்தின் தன்மையானது திட்டமற்ற விதத்தில் நிகழ்ச்சிகளுடன் அள்ளுண்டு அன்றாட நிலைமைகளைச் சமாளிக்கும் ஒரு தடுப்பு யுத்தமாக இருந்ததோ, எதிர்காலம் பற்றி நினைக்கச் சக்தியற்றதாக இருந்ததோ அவ்வாறே இந்தத் தூய்மைவாதப் போக்கும்

இந்தப் போக்குக்கும் எமது விடுதலைப் போராட்டம் செல்லவேண்டிய பாதை பற்றி தெளிவு இல்லை. ஆனால் எந்தத்தவறுகளுமற்ற ஒரு தூய்மை வாத நோக்கை அது கொண்டிருந்தது -எல்லாத் தவறுகளையும் எதிர்ப்பது.

இந்தப் போக்கு இன்னொரு தவறையும் தன்னையறியாமலேயே இழைத்தது. அதாவது வரலாறு எமது மனவிருப்பப்படி இயங்கவில்லை. அது சமூக சக்திகளிற்கு இடையேயான போராட்டங்களால் என்பதை அது மறந்துவிடுவதால் 'சார்பற்ற' நிலை ஒன்று சாத்தியம் என நம்பியது.

போராட்டத்தில் சக்திகளின் அணிசேர்க்கையை அது மதிப்பிடுவதில்லை. இந்திய இராணுவமும், இலங்கை இராணுவமும், எல். ரி. ரி. ஈ. யும், ஈ. பி. ஆர். எல். எவ். வும் இதன் கண்ணோட்டத்தில் ஒரேமாதிரியாகத்தான் படும்.

இதற்குப் பின்னுள்ள சமூக சக்திகள் பற்றிய அக்கறையை இப் போக்கு கொண்டிருக்கவில்லை.

இந்தப் போக்கின் சிந்தனை அடிப்படையில் பொருள்-முதல்வாதச் சிந்தனைக்கு எதிரானது. இது உலகை மாற்றும் சிந்தனையல்ல. நிலவும் உலகை புனிதமாக்கும் சிந்தனை என்பது வெளிப்படை.

ஆனால் இதிலேயும் கூட ஒரு சுவையான அம்சத்தைநாம் அவதானிக்கலாம்.

இந்தச் சிந்தனைப் போக்குடன் உடன்பாடுகாண முடியாத சக்திகள் கூட 'சரியான போக்கு' என்ன என்பதைத்தெரியாததால் இந்தப் போக்குள் இணைந்துகொண்டனர்.

இவர்களின் கருத்துகளும், விமர்சனங்களும் ஒருபுறம் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது போலும், சார்பானது போலும் நடைமுறையில் தோற்றம் காட்டியது. (தொடர்ச்சி 43 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என். எஸ். எம். ராமையா

"மல்லிகைக் காதலன்" என்ற புனைபெயரில் "சொறிநாய்", "கப்பலேற்றிவிட்டார்கள்" "செவ்வாய் தோசம்" போன்ற தரமான சிறுகதைகளை எழுதிய காந்திமணி என்ற மலையக எழுத்தாளர் –

"முத்துச்சரம்", "மல்லிகை" ஆகிய இலக்கிய சஞ்சிகைகளை – பெரும்பாலும் பதுளையின் எல்லைக்குள்ளேயே உலவிய சஞ்சிகைகளை – வெளிக்கொணர்ந்தவர் –

பதுளையில் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இது ஏழு ஆண்டுகளுக்குமுன் நடந்தது.

எழுத்தின்மீது தீராத காதல் கொண்ட இந்த எழுத்தாளன் வாழ்வோடும், வறுமையோடும் போராடித் துவண்டு போய் நஞ்சிடம் தஞ்சம் புகுந்த அவலம் துக்கமானது. இது அன்று.

இன்று, மலையக இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் – திரு. என். எஸ். எம். ராமையா தனது முதுமைக்காலத்தில் உடல் நலக்குறைவோடு வறுமையோடும் போராடவேண்டிய நிர்ப்பந்தத்தின் மத்தியில் மறைந்துபோனார் என்ற செய்தி மனதைக் குத்துகிறது.

* * *

நூற்றி எழுபது ஆண்டு கால மலையக மக்கள் சமுதாய வரலாற்றில் – வாய்மொழி இலக்கியத்தையே முக்கிய இலக்கிய வெளிப்பாட்டுச் சாதனமாகக் கொண்டிருந்த சமூகத்தில் – புனைகதை இலக்கியத்திற்கு கால்கோள் நிறுவி மலையக இலக்கியத்திற்கு நவீன தன்மையைச் சிருஷ்டித்த முன்னோடி என். எஸ். எம். ராமையா அவர்கள்.

துயர் தோய்ந்த மலையக மக்களின் வாழ்வை ரத்தமும், சதையுமாய் தமது இலக்கிய சிருஷ்டிகளில் கொணர்ந்ததில் ராமையா ஒரு சாதனைக்காரர்தான்.

1960களில் ஈழத்து இலக்கிய உலகில் பிரவேசித்து, ஒரு இருபதாண்டு காலப் பகுதியில் ஆக பதின்மூன்கே சிறுகதைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதினுலும் தனது எழுத்தின் வளத்தால் கடல் கடந்தும் கௌரவம் பெற்ற சாதனை அவருடையது.

எழுதுகிறவனின் சுதர்மம் எதுவாயிருந்தாலும் அவனுடைய குரல் சிருஷ்டிகளிலே தூக்கலாக விழுந்துவிடக்கூடாது என்பதில் அவர் எவ்வளவு அவதானமாக இருந்திருக்கிறுர் என்பதை அவருடைய எல்லாச் சிறு கதைகளுமே உணர்த்தி நிற்கின்றன. சிறுகதையின் வார்ப்பு சிதைந்து போகாமல் ஒரு தேர்ந்த சிற்பியின் லாவகத்துடன் அவர் நுட்பமாக தனது சிறுகதைகளைச்

## மு.நித்தியானந்தன்

செய்திருக்கும் பாணியில் அவர் கு.ப.ரா.வை நினைவுக்குக் கொண்டுவருகிறுர். கதா பாத்திரங்கள் ஆர்பாட்டம் இல்லாமல் வெகு இயல்பாகத் தம்மை வெளிப்படுத்தும் நேர்த்தியை என். எஸ்.எம்.மின் கதைகளில் சிறப்பாகக் காணலாம்.

மலையகமக்களின் வாழ்க்கையினை இலக்கிய ஒளியில் தரிசிக்க முனையும் எவரும் அந்த மக்களின் வாழ்நிலை உழைப்பை ஆதாரமாகக்கொண்டு நெய்யப்பட்டிருப்பதைக் காண மறுக்க முடியாது.

உடலம் ஓய உழைக்கும் அந்த மக்கள் கூட்டத்தின் அற்ப சொற்ப ஆசைகள், கனவுகள், விருப்புகள் கூட எப்படி நிராசைகளாய் சிதைந்துபோய் விடுகின்றன என்பதை அவர் மிகத் துல்லியமாகக் காட்டுகிறுர்.

கொரூர சுரண்டல் அமைப்பில் பிய்த்து எறியப்பட்ட தனிமனிதனின் குரூர அவலத்தை இவரது கதைகள் கலாபூர்வமாகப் பிரகடனம் செய்கின்றன.

இரும்புக்கடையிலே வேலைபார்த்த இந்த இளகிய மனிதரின் சொந்த வாழ்க்கை மிகவும் சோகமானதுதான். மலையக இலக்கியத்திற்கு முதற் பாதை வெட்டிய இந்த இலக்கிய மூலவன் - அந்தத் தொழிலாள மக்களின் அந்தகாரத்தை இலக்கிய ஒளியில் தரிசிக்க முயன்றவன் தனது சொந்த வாழ்க்கையில் பாதைவெட்ட இயலாதவனுய் - ஒளி காண முடியாதவனுய் துவண்டுபோனது ஒரு குரூர முரண்.

சொந்த வாழ்க்கையில் சோதனையைச் சந்தித்தவர்களால்தான் சமூக வாழ்க்கையில் சாதனையைச் செய்ய முடிந்திருக்கிறது.

அந்த மகத்தான இலக்கிய மனிதரின் மறைவு ஐரோப்பாவில் வாழ்கின்ற தமிழர்கள் மலையக இலக்கியத்தின் மீதான கரிசனையைக் காட்டுகின்ற ஒரு தொடக்கமாக அமைய வேண்டும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுக்கு — எப்ப நேரமிருக்கும்?!! —

ஓடிக்கொண்டு போகும்
உங்களை
பின்னே
நடந்து வருபவர்கள்
கூப்பிடுகின்றார்கள்.

பிளீஸ், கொஞ்சம் நில்லுங்கள்.
ஏன் கூப்பிடுகிறார்கள்
என்று
கேட்டுத்தான் செல்லுங்களேன்.

யார் அவர்கள்?
ஒவ்வொரு அசைவிலும்
சமூகம்
நன்மையடைய வேண்டும்
என்ற அவாவுடைய
எழுத்தாளர்கள்..
கவிஞர்கள்...
கலைஞர்கள்...

புத்தகம் எழுதினார்கள்.
வேலையில்லா விசரர்கள்
என்று சொல்லி
சினிமா எக்ஸ்பிறஸ்ஸும்,
பேசும் படமும்,
பொம்மையும்,
பருவ காலமும்
அழகாய் இருக்குதென்றும்
பிரயோசனம் உண்டென்றும்
ஓடுகின்றீர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடகம் போட்டார்கள்.
அடுத்த ஞாயிறு
அமலா வருகிறாள்.
இவங்கட கூத்து...
இகழ்ந்துகொண்டு
ஓடுகின்றீர்கள்.

புதிதாகச்
சொல்லமாட்டார்கள்தான்.
புரியக்கூடிய மாதிரி
நல்லன சொல்ல வருகிறார்கள்.

சொல்லத் தேவையில்லை
எல்லாம் தெரியுமென்பீர்கள்.

பிளீஸ், கொஞ்சம் நில்லுங்கள்.

நீங்கள்
ஓடிப்போய்ச் சேரும்
இடத்திற்குத்தான்
அவர்களும்
நடந்து வருகின்றார்கள்.

உங்கள் ரசனையோடுதான்
எழுதுகிறார்கள்.
நடிக்கிறார்கள்.
படிக்கவும்,
பார்க்கவும்
நேரமில்லை என்பீர்கள்.

மெத்றோ+ படிகளிலும்,
ட்ரெயினிலும்
எழுதினால் படிப்பீர்களா?
படிப்பதற்கும்
நேரமில்லையென்பீர்கள்
என நினைக்கின்றேன்.

றெஸ்ரோறண்ட்
கோப்பைகளில் எழுதினால்
படிப்பீர்களா?
பத்திரோன்++
அனுமதி தரமாட்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசும் படத்தில் எழுதினால்...
வாங்க மாட்டீர்களே.
மாற்றான் தோட்டத்து
மல்லிகையில்தான்
மணமுண்டென்பீர்கள்.
ஞாமுக்கு வந்து சொல்ல
முகவரி தெரியாது.
வீதியில் நின்று சொன்னால்
விசர் என்பீர்கள்.

அப்போ
எப்படிச் சொல்வது?

உங்களுக்கு
எப்போ நேரமிருக்கும்?

## சு. கருணாநிதி

+ மெற்றோ - நிலக்கீழ் புகையிரதம்
++ பத்திரிகை - பேப்பர்



## வாசகர் கடிதங்கள்

ஒருசில ஒளிப்பதிவு நாடாக்களில் சிங்கப்பூர் ஆடம்பரங்களைப் பார்த்துவிட்டு, சிங்கப்பூரில் வேலை பார்க்கும் பெண்கள் ஆடம்பரமானவர்கள் என்றும், அரை-விபச்சாரிகள் என்றும் 'போற்றப்பட்டுக்கொண்டிருக்கும்' நிலையில் கலம் 32, 33இல் வெளியான "வேலைக்காரிகள்" என்ற சிறுகதை சிங்கப்பூரில் எமது பெண்கள் சந்திக்கும் அனைத்து சித்திரவதைகளையும் தெளிவாக எடுத்து காட்டுகிறது.

இத்தகைய சித்திரவதைகளுக்கு "..எங்கடை நாட்டிலே இருக்கிற தர்பார்களும், பீடங்களு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்தான் பிரதான காரணிகள்" என்ற கருத்து கதாசிரியர்களின் தெளிவான பார்வையை எடுத்து காட்டுகின்றது.

இச் சிறுகதையை எழுதிய கதாசிரியர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, இன்னும் பல வழிகளினூடாக சிங்கப்பூர் நிலைமைகளை வெளிக்கொணரவேண்டும் என்பது எனது விருப்பம்.

வி. நடராஜன்

எமது சமூகத்தில் மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம்வரை பொய்மையும், சூதும் மலிந்து, கொலைக் கலாச்சாரத்திற்குள் மக்கள் அழிந்துகொண்டிருக்கின்ற இக் காலகட்டத்தில் துணிந்து உண்மைகளை வெளிக்கொணர்ந்து அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் உங்கள் பத்திரிகையை எவ்வளவு பாராட்டினலும் தகும். எவ்வித தடங்கலுமின்றி தொடர்ந்தும் இப் பத்திரிகை வெளிவந்து, எமது சமுதாயச்சிந்தனைகளை மாற்றியமைக்க நிச்சயம் உதவும் என்று நம்புவதோடு, அறநெறிக்குட்பட்டு நீதி நியாயங்களுக்காக, ஆணித்தரமான கருத்துகளை முன்வைத்து நல்லமுறையில் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என வாழ்த்துக்கள்.

ம. ஈஸ்வரி

எத்தனையோ மைல்களுக்கப்பால் இருந்துகொண்டு எமக்கு அனுப்பப்படும் துண்டில்களை வாசித்து, அதிலிருந்து விசயங்களை அறிந்து மிக்க வேதனையையும், அதே நேரத்தில் எமது நாட்டில் வாழ்ந்துகொண்டு நாட்டில் நடப்பவைகளை, அறிந்துகொள்ள முடியாதவைகளைத் துண்டில்களின் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

இனவாதத்தினுல் நமது நாட்டில் வறிய மக்களே துன்ப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ருர்கள். உண்மையிலேயே வறிய மக்களிடையே சாதி, மதபேதம் இனவாதம் இல்லை என்று நம்புகின்ருேம்.

சிங்கள, தமிழ் மக்கள் மலைநாட்டுப் பகுதியில் சமமாக வாழுகின்ருர்கள். இந்த சமாதான வாழ்க்கையில் வாழ்பவர்களை இனவாதம் பற்றிக் கொள்ளாமல் இருப்பதற்கு பல வழிமுறைகளிலும் சமாதானத்தை வெளிப்படுத்த முயன்று வருகின்ருேம்.

இலங்கை ......

---

"தேசத்தின் குறிப்புகள்" மீண்டும் அடுத்த கலத்திலிருந்து தொடரும்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிகார மாற்றத்தில் இருந்து

பிரித்தானிய காலனியநாடுகளில் ஒன்றுக இருந்த இலங்கைக்குச் 'சுதந்திரம்' என்ற பெயருடன் சிங்கள தரகு முதலாளித்துவங்களின் கையில் பிரித்தானிய அரசு ஆட்சியதிகாரத்தைதை ஒப்படைத்தது. அதைத்தொடர்ந்து பிரித்தானிய ஆளும் வர்க்கம் ஒடுக்குவோராகவும், இலங்கை மக்கள் ஒடுக்கப்படு-வோராகவும் இருந்த நிலை மாறி இலங்கையிலேயே பெரும்பான்மை ஒடுக்கும் தேசியஇனமாகவும், சிறுபான்மை ஒடுக்கப்படும் தேசிய இனமாகவும் மாற்றமடைந்தன. தேசிய ரீதியிலான அரசு உருவாகியதே இப்பகை முரண்பாட்டிற்கு - இனப்பிரச்சினைக்கு - புற வயக் காரணியாக அமைந்தது.

பொதுச் சொத்துடமை தனிப்பட்டோரால் பறிக்கப்பட்டு (பண்டைக் காலத்தில் உற்பத்திச் சாதனங்கள் யாவும் பொதுவாகவே இருந்தன) தனிச் சொத்துடமையாக்கப்பட்டதிலிருந்து வர்க்கப் போராட்டம் ஆரம்பித்துவிட்டது.

தனிச் சொத்துடமையைப் பேணுவதற்காகவும், அதை நிலைநிறுத்துவதற்குமாகவும் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகள் தம்மை இனங்காட்டாது மூடி மறைப்பதற்காக தேசிய இனங்களிடையே ஒடுக்கும் தேசிய இனம், ஒடுக்கப்படும் - தேசிய இனம் என்ற முரண்பாடுகளை வளர்த்துவருகின்றன.

இவ் வரலாற்று உண்மையின் அடிப்படையில் தொடர்ந்த இனவாதத்தை, மாறி மாறி அரசியல் அரியாசனங்களில் அமர்ந்த அரசியற் கட்சிகள், தம்மால் நிறைவு செய்ய முடியாத பொருளாதார முடக்கல்களைத் திசை திருப்ப எப்போதுமே பயன்படுத்தி வந்தன.

காலனியாதிக்கவாதிகளிடமிருந்து 'விடுலை' பெற்றதிலிருந்து இலங்கை தேசிய, தரகுமுதலாளித்துவ அரசுகளினல் தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜையாக்கப்பட்டார்கள்.

மலையக மக்களின் குடியு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு, சிங்களத்தை ஆட்சி மொழியாக்கியது போன்றவற்றுடன் கல்வி, வேலைவாய்ப்பு, குடியேற்றம், பொருளாதார மேம்பாடு போன்ற அனைத்திலுமே தமிழ் பேசும் மக்களும், அவர்களின் - பாரம்பரிய பிரதேசங்களும் ஒதுக்கப்பட்டு வந்துள்ளன.

தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வன்முறைகளும், கலவரங்களும் சிங்கள ஆளும் வர்க்கத்தினராலும், மதவாதிகளாலும், இனவெறியர்களாலும் தூண்டப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சொத்துகள் சூறையாடப்பட்டன

தொடர்ந்து கொண்டிருந்த அடக்குமுறைகளானது தமிழ் மக்களின் உரிமைகளைப் பாது-காக்கவென ஓர் அரசியற்கட்சியின் அவசியத்தை உணர்த்தியது.

இதனடிப்படையில் தோற்றம் கண்டதுதான் காலத்துக்கேற்ப மாற்றம் கண்ட தமிழர்விடுதலைக் கூட்டணியாகும்.

வாக்குறுதிகளை அள்ளிவீசி பதவியைப் பெற்றுக் கொண்ட த.வி.கூ.வினர் பாராளுமன்றத்திற்குச் சென்றவுடன், வெளி உலகிற்குத் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவதாகக் காட்டிக் கொண்டாலும், உள்ளளவில் தமது வர்க்க நலன்களுக்-கேற்ப, ஆளுங்கட்சிகளால் போடப்பட்ட எலும்புத் துண்டுகளை ருசி பார்த்தனரேயன்றி, தமிழ் பேசும் மக்களின் விடிவிற்காய் எதையும் சாதித்துவிடவில்லை.

இவர்களது முதலாளித்துவ நலன் பேணும் சாத்வீகப் போராட்டங்கள் யாவும் நசுக்கப்படுவதாகப் 'பாவனை செய்யப்பட்டதில்', அடக்குமுறை இயந்திரங்களான பொலிஸ், இராணுவம் போன்றவற்றால் கொல்லப்பட்டதும், பாதிக்கப்பட்டதும் அப்பாவி மக்களே.

ஆனால் இந் நிகழ்வானது ஒடுக்கப்படும் மக்களைச் சிந்திக்கத் தூண்டும் என்ற உண்மை இவர்களுக்குத் தெரிந்திருந்தும், ஆயுதத்தால் அவற்றையெல்லாம் அடக்கிவிடலாம் என்றே கனவு கண்டனர்.

---

## ந. சிவரூபன்

---

சாத்வீகப் போராட்டங்கள் எதையுமே சாதிக்காதென்ற உண்மையும், உயர் கல்வியைத் தடுத்த தரப்படுத்தல் சட்டமும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் 'தனியரசு' ஒன்றை நிறுவுவதே சரியான வழி என்ற முடிவுக்கு வர வித்திட்டது.

ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கத் தலைமைகளோ போராட்டத்தின் ஒரு கருவியாகப் பாவிக்க வேண்டிய ஆயுதத்தை போராட்டத்தின் - மாபெரும் சக்தியாக கருதிய-தோடு, தனித்த சிறு குழுக்களி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞல் 'தமிழீழம்' காணலாம் என செயற்பட்டனர்.

இலங்கை தரகு முதலாளித்துவ அரசை அதன் வர்க்க நண்பரான இந்திய முதலாளித்துவ அரசின் துணையுடன் அழிக்கலாம் என்ற தமது வர்க்க சித்தாந்தத்துடன், சூழல் நிலைமைகளைக் கணித்து தவிர்க்க முடியாமலும், இந்திய அரசின் காலடியில் விழுந்தனர்.

இந்திய அரசினுல் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் அடக்குமுறைகளை, வங்கம் தந்த பாடத்தை, இலங்கை பெருந்-தேசிய இனவாத அரசைக் காப்பாற்றுவதற்காக தனது இராணுவத்தை அனுப்பி ஜே. வி. பி. யின் நாடு தழுவிய கிளர்ச்சியை நசுக்கியது என்பவற்றையெல்லாம் நிராகரித்துவிட்டு, இந்திய முதலாளித்துவத்தின் பாதுகாவலர்களை ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலர்களாக வர்ணித்தனர்.

பிராந்தியஆதிக்க விரிவாக்கக் கொள்கையுடைய இந்திய முதலாளித்துவமானது இதைத் தனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதி உரிய காலம் வரும்வரை இந்திய உழைக்கும் மக்களின் வரிப்பணத்திலும், தேசிய நிதியிலும் ஈழ இயக்கங்களுக்குத் தீனி போட்டு வளர்த்தது.

தனது நோக்கம் கருதி இந்திய அரசு வழங்கிய ஆயுதங்களை, தமிழ் மக்களின் விடுதலைக்காகச் செய்யப்பட்ட உதவியென மக்களுக்குப் பறைசாற்றி இந்திய அரசை போட்டிபோட்டு 'வாழ்த்துவதன் மூலம்' ஆயுத அன்பளிப்பை அதிகமாக அடையவதிலேயே இந்த இயக்கங்கள் ஆர்வம் காட்டின.

இந்திய அரசின் எண்ணத்திற்கான காலவரையறையைக் குறைப்பதற்காக இயக்கங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அரசின் உளவுப்படைகளான 'ரோ' 'கியூ' போன்றவற்றின் சதிகளால் இந்த இயக்கத் தலைமைகள் இயக்கத்திற்குள்ளேயிருந்த முற்போக்குச் சக்திகளையும், இயக்கம் மாறி இயக்கமாகவும், இயக்க அராஜகங்களுக்கு எதிரான அப்பாவிப் பொது மக்களையும், முற்போக்குச் சிந்தனையாளர்களையும் கொன்று குவித்தனர்.

கடந்த காலங்களில் நடந்த இத்தகைய நிகழ்வுகளுக்குப் பின்னே உளவுப்படையின் 'உன்னதமான' ஆலோசனைகள் இருந்ததை இயக்கங்களே மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

மாற்று இயக்க அழிப்புகள், மாற்று இயக்க ஆதரவாளர்கள் படுகொலைகள் நடந்து -கொண்டிருந்தபோது, இலங்கை இராணுவம் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு தனது மூர்க்கத்தனமான தாக்குதல்களைத் தொடுத்தது.

www.tamilarangam.net



போராளிகள் பயிற்சியில்...

'கட்டுப்பாட்டில்' இருந்த பிரதேசங்கள் யாவும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் வந்தன. இக் கட்டுப்பாட்டுக்கான யுத்தத்தில் பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான மக்கள், போராளிகள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இலங்கை மீது பிரச்சினையைத் தீர்ப்பது என்ற போர்வையில் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு தனது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் நிலைநாட்ட தருணத்தை எதிர்பாத்திருந்த இந்திய அரசானது இந் நிகழ்வுகளைப் பயன்படுத்தி உணவுப் பொட்டலங்களுடன் தனது படையை அனுப்பி வைத்தது.

தனது வருகைக்கான இலக்கையடைய இந்திய அரசு மேற்கொண்டதுதான் இலங்கையரசுடனான 29.07.87இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமும், தனது மேற்பார்வையில் நடத்தி முடித்த தேர்தல்களும்.

அனைத்து குட்டி முதலாளித்துவ இயக்கத் தலைமைகளாலும் 'ஏற்றுக்கொள்ளப்பட்ட' நிலையிலேயே இவ்வொப்பந்தம்

www.tamilarangam.net

கைச்சாந்தானது.

ஆனால் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட 'அதிகாரப் பகிர்வு' என்ற நாடகத்தில் புலிகளின் தலைமை 'ராஜீவுக்கும், இந்திய இராணுவத்திற்கும்' எதிராகத் திரும்பியது. ஈரோஸ் பச்சோந்தித்தனமாக தமது நிறத்தை மாற்றிக்கொண்டனர்.

இவை ஒருபுறம் இருக்க, இந்திய அரசின் நயவஞ்சகத்தனத்தைப் புரிய முடியாமல்(?) தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பதாக நினைத்து அரியாசனம் ஏறியது ஈ.பி.ஆர்.எல்.எவ்.வும், அதன் கூட்டாளிகளும்.

புளொட் தலைமை மாகாணசபையில் பங்கெடுக்காததிற்கு அத் தலைமை ஒன்றும் புரட்சிகரச் சலவைக்கு உட்படுத்தபடவில்லை. மாறாக கடந்தகால கறைபடிந்த வரலாறுகளைக் 'கழுவுவதற்காக' ஏனைய இயக்கங்களைப் போலவே இந்திய இலங்கை ஆளும் வர்க்கங்களுடன் கூட்டுகளைப் பலப்படுத்த 'பேச்சுவார்த்தைகளை' நடத்திக் - கொண்டிருக்கிறது.

மக்கள் அமைதியை விரும்புகிறார்கள், போராட்டத்தால் துன்பத்தையே வாழ்க்கையாக்கி கொண்ட மக்கள் நிம்மதி மூச்சு விடத் துடிக்கின்றனர் என்ற யதார்த்தத்தை(!) தமக்குச்சாதகமாக்கி, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்ததோடு மட்டுமல்லாமல், இந்திய-இலங்கை அரசுகள் ஏற்படுத்திய மாகாணசபையில் பங்கேற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் அதனை ஓர் 'இடைக்கால அரசியல் வடிவமாகப்' பயன்படுத்தாமல், இந்திய அரசின் ஆலோசனையின் - ஆதரவின் - பேரில் ஆயுத அடாவடித்தனங்களுக்கும், மக்கள் திரள் படுகொலைகளுக்கும், பாலியல் பலாத்-காரங்களுக்கும், பலவந்தமாக இளைஞர்களைக் கடத்திச் சென்று தொ(கு)ண்டர் படையை உருவாக்கவுமே பயன்படுத்தினர்.

மாகாணசபைத் தேர்தல் கூட எப்படி நடைபெற்றது? மக்களின் விருப்பத்திற்கு மாறாக, மக்களைக் கட்டாயத்திற்குட்படுத்தி தேர்தல் கூட்டங்களுக்கு அழைத்துச் சென்றனர். நாட்டில் பல்வேறு சக்திகளாலும் மக்கள் தினமும் படுகொலை செய்யப்பட்ட நிலையிலும், போராட்ட நெருக்கடிகளினால் மக்கள் இடம் பெயர்ந்திருந்த நிலையிலும் திட்டமிட்டபடி எவ்வாறாயினும் 'அரசொன்றை' நிறுவியாகவேண்டும் என்ற நோக்கில் தேர்தல் நடத்தப்பட்டது.

போதாக்குறைக்கு இத் தேர்தல்கள் 'ஜனநாயக' ரீதியில் நடந்ததாகவும், பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு வாக்களித்ததாகவும் முதலாளித்துவப் பத்திரிகைகள் புளுகின.

ஆனால் தமிழ் பேசும் மக்களின் உயிர்கள் பெறுமதியற்றிருந்த நிலையும், வாக்களிப்பதற்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காக மக்கள் பலவந்தமாக கூட்டிச் செல்லப்பட்ட நிகழ்வும் முதலாளித்துவப் பத்திரிகைகள் வர்ணித்த ஜனநாயகத் தேர்தலை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன.

மக்களின் ஒப்பதல்களையுள்ளடக்காத ஒப்பந்தத்தின் மூலமும், போலித் தேர்தல்களின் மூலமும் சுரண்டும் பங்குதாரர்களுடன் கூட்டுச் சேர்ந்து எம்மை அடக்கி, ஒடுக்குவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது என்பதை இக் கூட்டம் 'ஆட்சிப் பொறுப்பை' ஏற்றதிலிருந்தான நிகழ்வுகள் மீண்டும் நிரூபித்தன.

இக் குழுக்களால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அற்ப சலுகைகள் கூட இந்திய அரசின் மூலமே கிடைக்கப் பெற்று அரைகுறையாக அமுலாக்கப்பட்டன.

ஒட்டுமொத்தத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் தமது ஆதரவாளர்களை ஆட்சியிலமர்த்தி தமது இராணுவ ஆட்சியை நடைமுறைபடுத்தினர்.

இந் நிலையில் " அமைதி காக்க வந்த இராணுவத்தைப் புலி சுடுகின்றது; அமைதிப்படை பலத்த சிரமங்களுக்கு மத்தியில் அமைதி காக்கின்றது; அமைதிப் படை என்றும் எங்களுக்குத் தேவை" என்று ஓலமிட்ட இக்குழுக்களை, மாகாணசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து நடந்த பாராளுமன்றத் தேர்தல்களின் மூலம் மக்கள் ஒதுக்கி வைத்தனர். அதாவது இத் தேர்தலைப் பயன்படுத்தி தமது எதிர்ப்பை மக்கள் தெரிவித்தார்களேயன்றி இதன் எதிரொலியாய் பாராளுமன்றத் தேர்தல்களினால் பதவியைப் பற்றிக் கொண்டவர்களை பரிசுத்தங்களாகக் கருதவில்லை. இலங்கை இராணுவம் எவ்வாறு தமிழ் பேசும் மக்களைக் கொன்று குவித்து, பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்து, சொத்துகளைச் சூறையாடியதோ அதைவிட மிகவும் திறம்படவே இந்திய ஆக்கிரமிப்புப் படையினரும் தமது பணியைச் செய்து முடித்து 'உலகத்தின் நான்காவது சிறந்த இராணுவம்' என்ற பெயரை மீண்டும் நினைவு படுத்திய நிலையில் இலங்கையைவிட்டு வெளியேறியது.

அதிகாரப் பகிர்வுகளினால் ஏற்பட்ட தகராறினால் புலிகள் தலைமை இந்திய இராணுவத்திற்கு எதிரான போரை ஆரம்பித்து, 'மாகாணசபையால் எவ்வித உரிமைகளும் கிடைக்காது. அது தமிழீழத்தில்தான் கிடைக்கும். அதுதான் எமது தாகம். மாகாணசபையை ஏற்றுக்கொண்டவர்கள் துரோகிகள். அவர்களை அழிக்க வேண்டும்' என்றெல்லாம் அரசியல் அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்படாத போராளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தலைமை விசுவாச மேலீட்டால் இவைகளை நம்பியபோராளிகள் இந்திய இராணுவத்திற்கு எதிராகவும், புலி இயக்கத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமைக்கு எதிரான அனைத்து சக்திகளுடனும் யுத்தத்தை தொடுத்தனர்.

தலைமையின் அதிகாரத்திற்கான போராட்டமாக இருந்தாலும் தங்கள் உயிர்களை துச்சமென மதித்து, தலைமையை நம்பி தம்முயிர்களை கொடுத்த புலி இயக்கப் போராளிகளுக்கு மட்டுமல்ல, அனைத்து இயக்கப் போராளிகளுக்கும் நாம் வீர வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அதேவேளை புலி இயக்க தலைமையினது மட்டுமல்ல, அனைத்து இயக்கத் தலைமைகளினதும் சந்தர்ப்பவாதங்களைத் தொடர்ச்சியாக அம்பலப்படுத்திப் போராளிகளை மீட்டெடுக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இந்திய இராணுவம் புலி இயக்கப் போராளிகளை 'வேட்டையாடிக்' கொண்டிருந்தநிலையிலும், இந்திய இராணுவத்திற்கு எதிராக புலி இயக்கப் போராளிகள் தூண்டி விடப்பட்டநிலையிலும், மக்கள் படு கொலைகள் இந்திய இராணுவத்தால் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையிலும் புலி இயக்கத் தலைமை ராஜீவ்காந்தியுடன் சமரசம் செய்துகொள்ள முயன்றது. இது தலைமையே ஏற்றுக்கொண்ட விடயம். இத்தகைய கொடூர நிகழ்வுகளுக்குப் பின்புங்கூட இந்திய அரசுடன் நட்புறவைப் பேணவே இத் தலைமை முயல்கிறது.

சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட, ஒருங்கமைக்கப்பட்ட, ஒடுக்குமுறை நிறுவனமான அரசு என்பது தூய்மையானது. அது மக்களைப் பாதுகாப்பது. அதை ராஜீவ்காந்தி, ஜே. ஆர். போன்ற தனிநபர்கள் மாசுபடுத்துகிறார்களென மக்களுக்குப் போதித்து, இந்திய முதலாளித்துவத்தின் இன்றைய பிரதிநிதி வி. பி. சிங்கிற்கு வாழ்த்துச் செய்தியனுப்பி தமது 'ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துகின்றன இந்த இயக்கத் தலைமைகள்.

இவை ஒருபுறமிருக்க, இந்திய இராணுவம் பிரேமதாச-புலிகள் ஒப்பந்தத்தினுலும், புலிகளின் இந்திய இராணுவத்திற்கெதிரான போரினுலும் வெளியேற்றப்பட்டதா? இவ் வெளியேற்றமானது இந்திய முதலாளித்துவத்திற்கு ஏற்பட்ட தோல்வியா ? இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற இலங்கையரசு-புலிகள் பேச்சுவார்த்தைகளினுல் தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா? என்ற கேள்விகளுக்கு விடைகாணவேண்டிய தேவையை வரலாறு எம்முன் நிறுத்தியுள்ளது.

இந்திய முதலாளித்துவத்தின் நோக்கம் கடந்தகால குட்டிமுதலாளித்துவ விடுதலை இயக்கத் தலைமைகளிலும், போராட்டத்திலும் நம்பிக்கையிழந்த மக்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதை திசை திருப்புவதும், தொடர்ந்தும் இனவாதத்தை தூண்டிவிட்டு அங்கு ஒரு இன

www.tamilarangam.net

ஒருமைப்பாட்டையும், வர்க்கஎழுச்சியையும் ஏற்படவிடாமல் நீண்டகாலம் பாதுகாக்கக் கூடிய தலைமையிடம் இலங்கை அரசின் மூலம் அற்ப சலுகைகளைப் பெற்றுக் கொடுத்து, இலங்கை மக்களிடம் பிரசவிக்க இருக்கும்இன ஒற்றுமையை, வர்க்க எழுச்சியை ஒடுக்குவதுமேயாகும்.

இதன் அடிப்படையில் பிரச்சினையைப் பார்ப்போமாயின் கவர்ச்சிகரத் தாக்குதல்களினாலும், தலைமை பற்றிய விளம்பரத்தாலும், குறிப்பிடத்தக்க அளவில் 'பயபக்தியுடன்' மக்கள் ஆதரவளிக்கும் இயக்கமும், சர்வாதிகாரத்தன்மை கொண்ட இயக்கமும், தமிழ் பேசும் மக்களை தேசியவாதச் சகதிக்குள்ளே நீண்டகாலம் நீச்சலடிக்க வைக்க கூடிய இயக்கமும் புலிகள்தான் என்பது இந்திய முதலாளித்துவத்திற்கு நன்கு புரியும். இங்கே புலிகள் என்று குறிப்பிடுவது அதன் தலைமையையே அன்றி இயந்திரதனமாக 'ஏதாவதொரு' தாக்குதலுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்படாத — போராளிகளையல்ல.

1986ஆம் ஆண்டின் மத்தியிலும், இறுதியிலும் 'ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை நோக்கி' என்ற கொள்கையின் கீழ் ஏனைய இயக்கங்களை அழித்த நடவடிக்கைகளாலும் (இவ் அழிப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மிருகதனமான முறையில் நடந்தன என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்), இவ் அழிப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி இலங்கையரசினால் நடாத்தப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதல்களால் ஏற்பட்ட பொது அழிவுகளாலும் புலிகளின் தலைமை மக்கள் மத்தியில் வெறுப்பையும், நம்பிக்கையீனத்தையும் சம்பாதித்துக்கொண்டது.

எனவே இத்தகைய சூழ்நிலைகளில் இருந்து புலிகளை நிரந்தரத் தலைமையாக்க வேண்டுமென்றால் தான் இரண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய முதலாளித்துவம் தீர்மானித்துக்கொண்டது.

முதலில் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் புலிகளிடம் அதிகாரத்தைக் கொடுக்காமல் ஏனைய இயக்கத் தலைமைகளிடம் அதிகாரத்தையும், மாகாண அரசையும் ஒப்படைத்தல்., இதன் மூலம் முன்னர் குறிப்பிட்ட அனைத்து மக்கள் விரோதச் செயல்களையும் செய்வித்து, எக் காலத்திலும் கூட்டணி அமைத்து புலிகளைத் தோற்கடிக்க முடியாத அளவிற்கு மனித குலத்திற்கே விரோதிகளாக்கி அந்நியப்படுத்துதல். இந் நடவடிக்கையில் இந்திய முதலாளித்துவம் வெற்றி பெற்றது.

(தொடர்ச்சி அடுத்த கலத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு இளைஞனின் ஏக்கம்


எஸ்.வளர்மதி

எனது நண்பனே !
நான் உனது நாட்டிற்கு வரவில்லை என்று
குறை எண்ணாதே – சென்ற ஆண்டு நடந்த சம்பவம்
என்னை நிலைகுலையச் செய்ததே.
என் அன்னையும், பிதாவும் வீணாக அரையுயிரில்
எரிக்கப்பட்டார்கள். எனது சகோதரிகள்
என் முன் கற்பழிக்கப்பட்டனர்.
எனது அண்ணனை சன்னம் கன்னத்தில் முத்தமிட்டது.
நானும் தப்பியது முட்கம்பியிலிருந்து – அது மட்டுமா
செல்லமான செல்லடிகள் பார்க்கும்போது என்ன கொடுமை.
இன்னும் நான் கோழைதான். எதில்?
துக்கத்தில். ஆனால் இப்போ மகிழ்கின்றேன்.
கறுப்பு நிறத்தாடியை என் உயிர்க் காதலியாய் நேசிக்கிறேன்.
வரிகொண்ட உடையணிந்து..
துப்பாக்கி அன்னையும், சன்னம் சகோதரரும்,
தந்தையான வோக்கியும் கொண்டு எனது நாட்டை
வலம் வருகின்றேன். இப்போது
என் அண்ணன் விக்டர் போன்றே
காட்சி அளிக்கின்றேன்.
அனாதையாய், கோழையாய் வாழ்ந்த என்
மனமதை விரக்தியாக்கிய வெறிநாய்களின்
இரத்தத் துளியை நான் வைத்தியராய் நின்று
சோதிப்பேன். அதிலிருந்து இழந்த என்
தோழர்களின் முகங்களைக் கண்டுகொள்வேன்.
மடலை முடிக்கின்றேன். ஆனால்
புரட்சி முடியாது. யார் என்னை
வெறிகொள்ள வைத்தார்களோ
அவர்களை நான் வெற்றிகொள்வேன்.
நான் இனி வாழ்வது தமிழ் மண்ணிற்கே.
(இந்த ஆக்கம் பற்றி 42ஆம் பக்கத்தில்..)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செய்திக் குறிப்பு

01.09.90 வீரகேசரி

காத்தான்குடியை அண்மித்துள்ள 3 கிராமங்களில் 5 பள்ளிவாசல்கள், 55 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

போர் நிறுத்தப்பட வேண்டும் எனவும், 6வது அரசியல் சட்டத் திருத்தத்தினை நீக்கியும், வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும், வடக்கு, கிழக்கிலிருந்து ஆயுதப்படைகளை வாபஸ் பெற்று சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியும், தற்போதைய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமெனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

நமது மலையக மக்களுக்கு சர்வதேச ரீதியில்தான் பல உதவிகள் கிடைத்துள்ளன. ஆனல் நாம் உழைத்து அந்நியச் செலாவணியைப் பெற்று வருமானத்தைப் பெருக்கிக் கொடுக்கும் நம்நாடு நமக்கு எந்தளவில் உதவி இருக்கிறது என்பதையும் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்- இ.தொ.கா உபதலைவர் இராஜு

மண்டைதீவினைச் சுற்றிக் கடலில் கண்ணிவெடி வைக்கும் இலங்கைக் கடற்படையின் கப்பல் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றது. ஆனல்இக் கண்ணிகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் வழியை எல்.ரி.ரி.ஈ. போராளிகள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். தாங்கள் கடலில் கண்ணிகளைப் போட்டு வைத்திருப்பதாகவும், எனவே தப்பி ஓடவேண்டாம் எனவும் இலங்கைக் கடற்படையினர் கூறுகின்றனர். எனவே நாம் இராமேஸ்வரத்திற்குவர, கண்ணிகளைத் தவிர்த்து சுற்றுப் பாதையால் வருகின்றோம். இதனல் எமது பிரயாண நேரம் மேலும் 3 மணித்தியாலங்கள் நீடிக்கிறது- இராமேஸ்வரத்திற்கு வந்துசேர்ந்த அகதிகள்.

நாட்டின் 12 மாவட்டங்களிலும் சுமார் 10 இலட்சம் பேர் அகதிகளாக 694 நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்றார்கள்.

02.09.90 வீரகேசரி

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஊரடங்குசட்டம் அமுலாக்கப்பட்டு படையினரின் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன.

02.09.90 சன்டே ரைம்ஸ்

சில வருடங்களுக்கு முன்னர் பல எதிரிகளுடன் நாங்கள் சண்டையிடவேண்டி இருந்தது. இப்போது எல்.ரி.ரி. ஈ மட்டுமே எதிரியாக இருப்பதால் சண்டையிடுவது இலகுவாக இருக்கிறது- இராணுவ அதிகாரி.

03.09.90 வீரகேசரி

காவத்தை பொலிஸ் பிரிவிலுள்ள தோட்டமொன்றில் நுழைந்த வெளியாட்கள் சுமார் 100பேர் வரை தோட்டத் தொழிலாளர்களின் லயன்களுக்குள் நுழைந்து தொழிலாளர்களைத் தாக்கியுள்ளனர்.

ஏறுவூரில் இனந்தெரியாத துப்பாக்கிநபர்களினல் தமிழ்ப்பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வேறிரு பெண்கள் காயமடைந்துள்ளனர்.

தங்காலை பொலிஸ் பகுதியில் இனந்தெரியாத இருவரின் சடலங்கள் எரியுண்டு கிடந்தன.

04.09.90 வீரகேசரி

பிரபல மலையக சிறுகதை, வானெலி நாடக எழுத்தாளரும், சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவருமான என்.எஸ்.இராமையா காலமானர்.

கிழக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து கண்டிப் பகுதிக்கு வந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லீம் மக்கள் பலர் உணவுக்கும் , உடைக்கும் கஷ்டப்பட்டு வீடுகளில் பிச்சையெடுத்துத் திரிவதைக் காணமுடிகிறது. சில குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை உணவுக்கு வழியின்றி வீட்டுவேலைகளுக்கும் விட்டுள்ளன.

ஆயுதம் ஏந்திப் போர் புரிவோர் எந்த இயக்கமாக இருந்தாலும் அவர்களை ஒழித்துக் கட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம். இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை–பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன்

இந்திய அரசு பலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகியவற்றுக்கு ராஜரீக அந்தஸ்து வழங்கியதைப் போன்று எமக்கும் வழங்கவேண்டும். பி.எல்.ஓ.வுக்கு புதுடில்லியில் தூதரகம் ஒன்றை அமைக்க அனுமதி வழங்கியதைப் போன்று எமக்கும் அனுமதி தரவேண்டும். இந்தியா எம்மை உத்தியோகபூர்வமாக பேச்சுக்கு அழைக்கவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இதனை இந்தியாவுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்– லண்டனில் கிட்டு

காரைதீவு அகதி முகாமில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 6 சுகாதாரத் தொழிலாளர்கள் மகளின் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லீம் மக்களை எல்.ரி.ரி.ஈ.யினரிடமிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட ஊர்க்காவற்படையும், முஸ்லீம் சமூகத்திலுள்ள ஆயுதந் தாங்கிய விசமிகளும் திட்டமிட்டு தமிழ்மக்களை அழித்தொழிப்பதோடு, கலாச்சார, புனித ஸ்தலங்கள் அழிக்கப்பட்டும், வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டும், வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டும், தமிழ் சமூகத்திலுள்ள பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். செங்கலடியில் தங்கள் வீடுகளைப் பார்ப்பதற்காக அகதி முகாமிலிருந்து சென்ற பெண்கள் 3பேரை சில ஆயுதந் தாங்கிய விசமிகள் வெட்டியும், சுட்டும் கொன்றுள்ளார்கள். மூதூர் பகுதியில் அகதி முகாமுக்குச் சென்று பல இளம் பெண்களைக் கொண்டு சென்றுள்ளனர். அவர்களைப் பற்றிய எந்த விபரமும் தெரியவில்லை –ஈ.பி.ஆர்.எல்.எவ்

04.09.90 டெய்லி நியூஸ்

எல்.ரி.ரி.ஈ.க்கு எதிரான யுத்தத்தை நிறுத்தும்படி நாம் அரசிடம் கோரவில்லை. பாசிச பயங்கரவாதத்தையழிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு நாம் தொடர்ந்து ஆதரவளிப்போம் – சிறிமா

05.09.90 வீரகேசரி

கிளிநொச்சிக்கு அத்தியாவசிய உணவு பொருட்களை எடுத்துச்சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கொடிகளைத் தாங்கிய லொறிகள் மாங்குளமருகே புலிகளால் திருப்பியனுப்பப்பட்டதான பத்திரிகைச் செய்திகளை தவறானவையென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மறுத்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகமே லொறிகளைத் திருப்பியனுப்பியுள்ளன.

காத்தான்குடியில் அகதிகளாக உள்ள 1734 குடும்பங்களைச் சேர்ந்த – 7691 பேருக்கு அரசாங்க நிவாரண உதவிகள் கிடைக்காமல் ஒரு நாளைக்கு ஒருதடவையே உணவு உட்கொள்ளுகின்றனர்.

06.09.90 வீரகேசரி

மட்டக்களப்பில் 3 இளம் பெண்கள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் தங்களிடமிருந்து அனுமதி பெறாது ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மக்கள் செல்வதற்குத் தடை விதித்துள்ளனர். மீறிச் செல்பவருக்கு 10,000 ரூபா அபராதம் செலுத்தாவிடில் புலிகளின் சிறையில் அடைக்கப்படுவார். ஒவ்வொரு குடும்பமும் புலிகளுக்கு 2 தங்கப் பவுன் கொடுக்கவேண்டும். தவறினால் குடும்பத்தில் இளைஞர் ஒருவரைக் கொடுத்தல்வேண்டும்.– பாதுகாப்பமைச்சு

யாழ்குடா நாட்டிற்கும், நாட்டின் பிரதான நிலப்பகுதிக்கும் இடையிலான போக்குவரத்துகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருட்களுக்கு யாழ்குடா நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் ஒருபுறமிருக்க, குடாநாட்டின் பல இடங்களிலும் பரவலாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்று வருவதாகவும், இதனால் சராசரி20 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழக்கவும், பெருந்தொகையானோர் காயமடையவும் நேரிடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

07.09.90 வீரகேசரி

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் மகாநாடு ஜனாதிபதி தலைமையில் கூடியபோது தனியான முஸ்லீம் சபைக்கான யோசனைக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

கல்கமுவ பகுதியில் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**07.09.90 டெய்லி நியூஸ்**

யாழ்ப்பாணத்தில் மக்கள் வானொலி கேட்பதைப் புலிகள் தடை செய்துள்ளனர். இதை மீறுபவர்களுக்குத் தண்டனையளிக்கப்படுகிறது. தண்டனைகளில் காதுக்குள் கொதி எண்ணெய் ஊற்றுவதும் ஒன்றாகும்.

**08.09.90 வீரகேசரி**

உன்னிச்சையில் கவனிப்பாரற்றுக் கிடந்த செல் ஒன்றை 3 சிறுவர்கள் கண்டெடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது செல் வெடித்ததினால் மூவரும் கொல்லப்பட்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளுகின்றனர். 12 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தோர் பொது உதவிகளில் வாழ்கின்றனர். 75 வீதமானோர் உணவு முத்திரைகளில் தங்கி வாழ்கின்றனர். இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை அனுப்பி வைக்காவிடில் அவர்கள் பட்டினியாலேயே இறந்துவிடுவர் –மட்டு மாவட்ட எம்பி யோசப்

மட்டக்களப்பில் பல்கலைக்கழகத்திலுள்ள அகதி முகாமுக்குள் புலிகள் பெருமளவில் புகுந்துவிட்டதான தகவல் ஒன்றில் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி 141 பேரை விசாரணைக்கென்று கொண்டு சென்றுள்ளனர்.

**09.09.90 வீரகேசரி**

இலங்கை அரசும், புலிகளும் விரும்பும் பட்சத்தில் இந்திய அரசு நடுவராக நின்று ஓர் இணக்க சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்குமென்று இந்தியமத்திய அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**10.09.90 வீரகேசரி**

வடக்கு–கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத்தடையை ஆட்சேபித்தும், உணவு, மருந்துப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்தும் யாழ் அன்னையர் முன்னணி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை யாழ் நகரில் நடத்தியது.

கிழக்குப் பல்கலைக்கழக முகாமில் 42 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பல்கலைக்கழகக் கட்டிடங்களுள்ளும், பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள வெளிகளில் நூற்றுக் கணக்கான சிறு ஓலைக்குடிசைகளை அமைத்துக் கொண்டும் இடநெருக்கடிக்கும், பல்வேறு அசௌகரியங்களுக்கும் மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். இங்குள்ள நூற்றுக்கணக்கான பெண்கள் தமக்கேற்பட்ட நிர்க்கதி பற்றி அழுதழுது தெரிவித்தபோது இவர்களைப் பார்வையிடச்சென்ற தூதுக் குழுவினரும் கண்கலங்கினர். பெண்களில் பலர் பாதுகாப்புப் படையினரின் கால்களில் வீழ்ந்து அழுததுடன், பாராளு மன்ற உறுப்பினர்களையும், ஏனையோரையும் கட்டிப்பிடித்து அழுதுகொண்டு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட தமது பிள்ளைகளையும், கணவன்மாரையும் விடுவிக்க ஏற்பாடு செய்யுமாறு கோரிய காட்சி அனைவரது உள்ளங்களையும் உருக வைத்தது.

ஐ.தே.க. அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளது. இன்றையநிலை தொடர்ந்தால் இன்னும் 4 மாதங்களில் நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். வாழ்க்கைச்செலவு உயர்ந்துசெல்லும் வேகத்தைப் பார்த்தால் செல்வந்தர்கள் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கிவிடுவர் எனத் தெரிகிறது – சு.க. எம்பி.

தீவுப் பகுதி இராணுவ நடவடிக்கைகளின்போது மண்டைதீவு தொடக்கம் அல்லைப்பிட்டி, ஊர்காவற்துறை வரையிலான பிரதேசங்களில் 2,000 க்கும் மேற்பட்ட ஓலை வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. கல் வீடுகள், பொதுக் கட்டிடங்கள் என்பனவும் குண்டுத் தாக்குதல்களினால் பலத்த சேதமடைந்துள்ளன. இப் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் முற்றாக வெளியேறிவிட்டனர்

யாழ்குடா நாட்டில் அமுல் செய்யப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் முளைப்படைந்த ஒருவார காலத்தில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

எப்படி அரசியல் உரிமைகளை வென்றெடுக்க அரசியல் இயக்கங்கள் தேவையோ அதேபோல் தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுக்க தொழிற் சங்கங்கள் தேவை. பொருளாதார உரிமைகளை வென்றெடுக்க தொழிற் சங்கங்களின் ஐக்கியமும் அவசியமானது – செங்கொடிச் சங்கப் பொது செயலாளர்

**11.09.90 வீரகேசரி**

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் அரசபடையினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பாக எவ்வித தகவலும் இல்லை. கைதானோரில் குழந்தைகள், பெண்களும் அடங்குவர். கைதாகி அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உகன திவுக்கெல்லீல வயல் வெளியில் அறுவடையில் ஈடுபட்டிருந்த 4 பெண்களும், 3 ஆண்களும் சுட்டுக் கொல்லபட்டுள்ளனர்.

திருகோணமலையில் இந்தக் கோயில் காணிகளில் பௌத்தர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அங்குள்ள காடுகளில் தொடர்ந்தும் தமிழர்கள் பாதுகாப்புக்காக ஒளிந்துள்ளனர். நகரத்தில் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு தறையாடப்படுகின்றன. கைதான நூற்றுக்கணக்கான தமிழர் தொடர்பாக இன்னமும் எதுவித தகவலுமில்லை.

மொனராகலைப் பகுதியில் புகுந்த ஆயுதம் தாங்கிய குண்டர்கள் அங்குள்ள தொழிலாளர்களைத் தாக்கிவிட்டு அங்கிருந்த பெறுமதியான பல பொருட்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ள பிந்திய தகவல்களின்படி 300க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்களைக் காணவில்லையெனத் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த டெலோ இயக்க உறுப்பினர் புலிகளால் ஆஸ்பத்திரியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

13.09.90 வீரகேசரி

மகாவலித் திட்டத்தின் கீழ்வரும் பீ, சீ வலயங்களில் 1,000 கடித்துறை மொனராகல மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டோர் குடியேற்றப்படவிருக்கிறார்கள். இவ்வலயங்கள் கல்குடாப் பகுதியில் அமைந்துள்ளன.

மட்டக்களப்புக்கு அருகேயுள்ள கிராமங்களாக சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய கிராமங்களிலிருந்து 117பேரைக் காணவில்லையென மட்டக்களப்பு சமாதான குழுவுக்கு இதுவரை புகார்கள் கிடைத்துள்ளன. சீருடை அணிந்தவர்களால் இக் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு வீடுகளிலிருந்த மக்கள் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பார் வீதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லபட்டுள்ளனர்.

இருதயபுரம் பகுதியில் இயக்கப்பகைமையினால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மாத்தளைப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் 25 காம்பராக்களில் சமார் 145 தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர். இதில் 7 காம்பராக்கள் புல்லினால் மூடி மறைக்கப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் இவர்கள் அயலவர்களின் வீடுகளில் காலத்தைக் கழிக்கின்றனர். இக் காலங்களில் இவ்வீடுகளில் பாம்புகளும் குடியேறிவிடுகின்றன. இவர்களுக்கு மலசலகூட வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக அடிக்கடி தொற்றுநோய்களும் பரவிவருகின்றன.

14.09.90 வீரகேசரி

யுத்த நிறுத்தத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதுடன், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை துரிதப்படுத்துமாறும் கோரி தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி ஏற்பாடு செய்த பிரார்த்தனை இயக்கத்தில் 12 தொழிற்சங்கங்கள் பங்குகொள்கின்றன.

அண்மைக்காலமாக இலங்கையில் பயங்கரவாதங்களாலும், யுத்தங்களாலும் மக்களின் அமைதியான வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. இந்தக் கொடுமைகளால் அனைத்து மக்களும் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். விசேடமாக தொழிலாளர்களும் பெரும் சிக்கல்களைச் சந்திக்கவேண்டியுள்ளது. வடக்கு-கிழக்கு யுத்தம் மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகிக் கொண்டிருக்கிறது. - ஐக்கிய தோட்டதொழிலாளர் சங்க அமைப்புச் செயலாளர் முத்துலிங்கம்

வெளிநாட்டு முதலீட்டாளர்களையும், பிரபல்யமான தொழில் நிபுணர்களையும் நாட்டுக்குள் கவர்ந்திழுப்பதற்கான வதிவிட விருந்தினர் திட்டம் ஒன்றை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. முதலீட்டாளர்களும், தொழில் நிபுணர்களும் இத் திட்டத்தின் கீழ் முதற் கட்டத்தில் 5 ஆண்டுக்கான வதிவிட விசாவைப் பெறுவர். காலக்கிரமத்தில் அவரது பங்களிப்பின் அடிப்படையில் இலங்கைப் பிரஜாவுரிமைக்கான தகுதியைப் பெறுவர்.

15.09.90 வீரகேசரி

திருகோணமலை மாவட்டத்தில் 20,000க்கும் அதிகமான மக்கள் இதுவரை அரச நிவாரணங்களோ, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிவாரணங்களோ இன்றிப் பட்டினியால் வாடுகின்றனர்.

வந்தாறுமூலையில் கைதான 158பேர் குறித்தும் சத்துருக்கொண்டானில் கைதான 117பேர் தொடர்பாகவும் யாதொரு தகவலும் இல்லையென்றும், அவர்களில் ஒருவராவது இதுவரை விடுதலை செய்யப்படவில்லை



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் மட்டு மாவட்ட எம்பி பாது காப்பமைச்சரிடம் முறையிட்டுள்ளார்

மதுறு ஓயாத் திட்டத்தின் கீழ் கல்குடாப் பகுதியில் 1,000 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளை உடன் நிறுத்த நடவடிக்கையெடுக்குமாறு த.வி.கூ. ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

16.09.90 சன்டே ரைம்ஸ்

கிழக்கு மாகாணத்தில் புனவை என்ற கிராமத்தில் புலிகளினால் 3 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 7 முஸ்லீம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

16.09.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அமைப்பில் முஸ்லீம், சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய ஒரு திட்டம் உருவாக்கப்படுவதற்குரிய முறைமையைத் தேடுவதற்கு அரசியற் தலைவர்களுடைய குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்திற்கு கிழக்கே மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் சுமார் 100பேர் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 10க்கும் மேற்பட்டோர் இறந்தனர். மேலும்பலர் பிடித்துச் செல்லப்பட்டனர்.

17.09.90 வீரகேசரி

இராணுவத்திற்கு ஆட் திரட்டும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

ஏறாவூர் பகுதியில் ஊர்க்காவற் படையினரால் கைதுசெய்யப்பட்ட 3தமிழ் பெண்களுக்கு என்ன நடந்தது என்று இன்னும் தெரியவில்லை.

தமிழ் மக்களைப் பழிவாங்கும் நோக்கில் புலிகள் என்ற போர்வையில் கிழக்கின் பல பகுதிகளிலும் முஸ்லீம் ஊர்க்காவற் படையினரால் அப்பாவி தமிழ் இளைஞர்கள் தினம்தோறும் அடித்துத் துன்புறுத்தப்பட்டு வருவதோடு, கைது செய்யப்பட்டு இராணுவமுகாமில் ஒப்படைக்கும் சம்பவங்களும் தொடர்ந்தவண்ணமுள்ளன.

வாழைச்சேனை கண்ணகி கிராமத்தில் இருவர் ஊர்க்காவற் படையினரால் கைது செய்யப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காயில் உள்ள புலிகளது மனித வதை முகாமில் இருந்து கைகள் வளங்க முடியாத நிலையில் வதையின்பின் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியுள்ள தகவலின் படி இந்த முகாமில் உள்ள 4,000 பேருக்கும் ஒரு நேர உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. முதுகு நிமிர முடியாதபடி அடைக்கப்பட்ட கூடுகளிலும், பதுங்குழிகளுக்குள்ளும் 150பேர் வீதம் பகுதி பகுதியாக 4, 000 பேரும் வைக்கப்பட்டுள்ளார்கள். குழிகளுக்குள் உள்ளவர்கள் மலம் கழிக்க ஒரு வாளி கொடுக்கப்படுகிறது.

புலிகளுக்கு எதிராகவே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்ற எமது நோக்கத்தோடு அரசாங்கத்தின் நோக்கமும் ஒத்திருந்தமையினால் பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வு காணலாம் என்ற எதிர்பார்ப்போடு அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம். இதனை அடிப்படையாகக் - கொண்டு வவுனியாவுக்கு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக வந்துள்ளோம் -புளொட்

18.09.90 வீரகேசரி

தமிழ் மக்கள் மீதான உணவுத்தடை, மருந்துத்தடை, எரிபொருள் தடை ஆகியவற்றைக் கண்டித்து யாழ்மாவட்ட அன்னையர் முன்னணியினர் மாபெரும் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதிலும், மேற்படி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான தாய்மாரும், முதியவர்களும் சுலோக அட்டைகளுடன் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறையில் இருந்து இராமேஸ்வரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகுமீது கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதல்களில் 8 அகதிகள் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர்.

யூ.என்.பி.யைவிட மனித உரிமைகள் குறித்துப் பேசக்கூடிய வேறொரு தகுதியான கட்சி இருக்கிறதா?– பிரேமதாஸ

20.09.90 ஐலண்ட்

களனிய ஆற்றில் மிதந்துவந்த தலையில்லாத 3 மனித உடல்கள் மீட்கப்பட்டன.

20.09.90 வீரகேசரி

வாழைச்சேனை காகித ஆலை விடுதிகளில் தங்கியிருக்கும் ஊழியர்களின் - பாவனைக்கென இருந்துவந்த 3 கிணறுகளில் இனந்தெரியாத விசமிகளினால் நஞ்சு கலக்கப்பட்டுள்ளது. ஆலை விடுதிகளில் அங்கு கடமையாற்றும் 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்களும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரைகுறையாக எரிந்த நிலையில் கிடந்த அழுகும் மனித சடலங்கள் சுற்றுப் பாதுகாப்புக்கு பெரும் அனர்த்தமாக இருக்கின்றன. வீதியோரங்களிலும், வாவிகளிலும், கிணறுகளிலும் அழுகி மணக்கும் சடலங்களை அப்புறப்படுத்தி சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை சூழல் பாதுகாப்பு அதிகாரசபை எடுக்க வேண்டும் – த.வி.கூ. எம்பி. நவரத்தினம்

கடந்த 3 வருடங்களில் ஆயிரக்கணக்கான இலங்கை சிவிலியன்கள் காணமற்போய்விட்டார்கள். அல்லது பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டுவிட்டனர் எனவும், துஸ்பிரயோகத்தை அரசாங்கம் ஊக்குவிப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டியுள்ளது. கடந்த ஜூன் மாதத்தில் புலிகள் விலகிச் சென்றபின் கல்முனையைக் கட்டுப்படுத்திய சிப்பாய்கள் பல இளைஞர்களைக் கைது செய்து பேனட்டுகளால் குத்திக்கொன்று உடல்களை எரித்ததாகவும் தெரிவித்த மன்னிப்புச்சபை பல மோசமான துஸ்பிரயோகங்களுக்குப் புலிகளும் பொறுப்பாக உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையின் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களில் ஒருவரும், இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கத்தின் தேசிய கமிட்டி உறுப்பினருமான கே.குகமூர்த்தி ஜாவத்தை வீதியில் வைத்து ஜீப்பில் வந்த காக்கியுடை அணிந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் என்று கூறும் போது வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியன அடங்கும். இலங்கைத் தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மலையகத் தமிழர்கள் ஆவார். ஆனால் அவர்களின் பிரச்சினை வெளியுலகுக்கு காட்டப்படாமல் மழுங்கடிக்கப்பட்டுள்ளது – மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன்

21.09.90 வீரகேசரி

புத்தளம் மாவட்டம் வெள்ள முந்தல் என்ற சிங்களக் கிராமத்தில் இனந்தெரியாத கறுப்பு உடையணிந்தகோஷ்டியொன்று புகுந்து நடத்திய தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 40க்கும் அதிகமான சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் மீன்வாடியிலிருந்த 50 குடிசைகளும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இராணுவ ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைக்காக கண்டியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் வந்து சேர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டஎல்லைக் கிராமங்களில் உள்ள சிங்கள, முஸ்லீம் விவசாயிகளின் வேளான்மைகள் பாதுகாப்புப்படையினரின் – பாதுகாப்புடன் அறுவடை செய்யப்படுகின்றன. ஆனால் தமிழருக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாததால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வேளான்மை அறுவடை செய்யமுடியாத நிலையில் அழிந்துகொண்டிருக்கிறது.

21.09.90 தாயகம்

புலிகளுடன் உறவு வைத்துக்கொள்வதற்காகத்தான் இந்தியப்படையை திருப்பியனுப்ப வேண்டும் எனவும், முழு இலங்கைக்கும் பிரபாகரனை இராணுவத் தளபதியாக நியமித்தால் அவருக்குச் சண்டைபோட யாரும் இருக்கமாட்டார்கள் என்றும் ஜே. ஆர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கூட்டிய மந்திரிசபைக் கூட்டத்தில் பிரேமதாஸ தெரிவித்தார் என லங்காதீபன் செய்தி வெளியிட்டுள்ளது

இரு தரப்புக்கும் வெற்றி கிடைக்காத யுத்தம் இது என்றும், அரசுடன் – பேச்சுவார்த்தை நடத்த தடைகள் இல்லை என்றும் மாத்தயாவும், பாலசிங்கமும் யாழ்ப்பாணம் சென்ற டெய்லி டெலிகிராப் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

அரசபடையின் விமானங்கள் 300 கிலோ எடையுள்ள குண்டுகளை வீசுவதாகவும், இப் பாரிய குண்டு வெடிப்புகளால் பதுங்குகுழிகளுக்குள் இருப்பவர்களுக்குகூட கண்களாலும், வாயினூம் இரத்தம் கொப்பளிப்பதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தினால் கொல்லப்பட்டபலர் குறித்த பல சம்பவங்கள் அடங்கிய ஆவணங்களை சர்வதேச மன்னிப்புச்சபையிடம் கையளிக்க சு.கட்சியின் மகிந்த ராஜபக்ச ஜெனிவாவுக்கு எடுத்துச் செல்கையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

திருமணமாகாத 18 தொடக்கம்22 வயதுவரையுள்ள இளைஞர்களை உடனடியாக இராணுவத்தில் சேருமாறு அரசாங்கம் வானொலியில் அழைப்புவிடுத்துள்ளது.

22.09.90 வீரகேசரி

பஸ் கட்டணத்தையும், விலைவாசிகளையும் குறைக்கக் கோரி 3 எதிர்க்கட்சிகளின் 40 எம்பிக்கள் பாராளும



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன்றத்திற்கு வெளியிலும், உள்ளும் அமைதிப் போராட்டம் நடத்தினர்.

இராணுவ ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்றபடைதளபதிகளே பகிரங்கமாகக் கூறியுள்ளனர் என எம்.பி ஒருவர் சுட்டிக்காட்டியபோது "இராணுவத் தளபதிகள் வாயை மூடிக்கொண்டு சண்டைபிடிக்கவேண்டும். அரசியல் எதுவும் பேசக் கூடாது என அவர்களுக்கு மிகக் கடுமையான உத்தரவிட்டிருக்கிறேன். இராணுவத் தளபதிகள் சண்டையிட வேண்டியவர்கள். அவர்கள் அதைத்தான் செய்யவேண்டும். அரசியல் பேசுவதற்கு அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். அரசியலை நாம் பார்த்துக்கொள்வோம்" என பாதுகாப்பமைச்சர் பதிலளித்துள்ளார்.

தமிழ்க் காங்கிரஸ் முன்வைத்துள்ள தமிழ்முஸ்லீம் மாகாணசபை யோசனையை மீள் பரிசீலனை செய்யுமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ், ரி.யு.எல்.எவ் புளொட், டெலோ, ஈ.என்.டி. எல் எவ் ஆகிய 5கட்சிகள் கேட்டுள்ளன.

புலிகளின் தலைக்கு மேலாக குண்டுகளைப் போடுவதை நான் எதிர்க்கவில்லை. அவ்வாறு செய்யவேண்டாமென நான் கேட்கவில்லை — யாழ்ப்பாண மாவட்ட எம்பி நவரத்தினம்.

தம் விருப்பம்போல் அப்பாவித்தமிழ் மக்களை புலிகள் அல்லது புலிகளின் ஆதரவாளர்கள் என்று வேண்டுமென்றே அடையாளம் காட்டி ஆபத்திற்குள் மாட்டிவிடுகின்றனர் முஸ்லீம் ஊர்க்காவற்படையினர். கொழும்பு வரும் பஸ்களை மறித்து தமிழ் இளைஞர்களை இழுத்தெடுக்கின்றனர். பின்னர் கொலை செய்கிறார்கள். வாழைச்சேனையில் சமீபத்தில் தொடர்ந்து 2 தடவைகளில் தமிழ் மக்கள் வாழும் பகுதிக்குள் புகுந்த அப்பாவிகள் சிலரைக் கடத்திச் சென்றுள்ளனர். இந்த தமிழர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாகவே நம்பப்படுகிறது.

23.09.90 வீரகேசரி

தேசிய பாதுகாப்பு நிதி ரூபா117 கோடி, 10 இலட்சத்தையும் தாண்டியுள்ளது.

24.09.90 வீரகேசரி

மட்டக்களப்பு தாழங்குடிக்கு அருகேயுள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்தில் 17பேர் கொல்லப்பட்டுள்ளனர். 15 பேர் வெட்டுக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்லோயா குடியேற்றம் பிரதேசங்களில் குடியேறியிருந்த சகல தமிழ்க் குடும்பங்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

வட—கிழக்கில் சண்டையிடும் இராணுவத்தினருக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரின் 100வீத ஆதரவும் உண்டு — அநுரா

அரசு தரப்பில் கூறப்படுவதைப்போன்று பல இலட்சக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டிருந்தால் தினசரி 228 வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். 22 வீடாவது தினசரி கட்டப்பட்டதா? 1977 முதல் அரசு தப்பான புள்ளிவிபரங்களைக் காட்டி மக்களை ஏமாற்றுகின்றது — ஐ.சோ.மு. உறுப்பினர்

25.09.90 வீரகேசரி

மட்டக்களப்பில் 2 இளைஞர்கள் ஊர்காவற்படையினர் எனச் சந்தேகிப்—போரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கல்முனைக் கடலில் வைத்து 3 முஸ்லீம் மீனவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அட்டூழியம் புரியும் முஸ்லீம் ஊர்க்காவற் படையை கலைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என 6 தமிழர் கட்சிகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

26.09.90 வீரகேசரி

பதவியாவுக்கு அருகே கஜபாபுரத்தில் 5 கிராமவாசிகள் கொல்லப்பட்டுள்ளனர். 5 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் மஜீத் என்பவர் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் வெட்டிப்பட்டார்.

கல்முனையில் லெப்பை என்பவர் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில் காணப்பட்டார். இப் பகுதியில் 3 தமிழர்கள் முஸ்லீம்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடியில் ஆயுதங்களுடன் படகில் வந்திறங்கிய 10பேரை புலிகள் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளதாக டெலோ இயக்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவர்கள் தமிழர்களைத் தாக்குவதற்காக சாய்ந்தமருதுவிலிருந்து வந்திறங்கியிருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர், முஸ்லீம்களிடையே நிரந்தர சமாதானத்தையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தும் முஸ்லீம் காங்கிரசின் நியாயமான அரசியல் ரீதியான முயற்சிகளுக்கு தமிழர் கட்சிகள் தடை போடுமானால் வடக்கு—கிழக்கு இணைப்பை எதிர்த்து முஸ்லீம்கள் வடக்கு—கிழக்கு பிரிவை ஆதரிப்பர் —மு.கா தவிசாளர் சேகு இஸ்ஸதீன்

வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கு ஒரு நாளைக்கு மாத்திரம் 4கோடி 10 இலட்சம் ரூபாவை இராணுவத் தளபதிக்கு அனுப்பியாக வேண்டும். இதனால் நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பாகும்— கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேசச் செயலாளர் டியூ. குணசேகரா

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது இருந்துவரும் அசாதாரண சூழ்நிலையினால் நாட்கூலி செய்து வரும் தொழிலாளர்கள் வருமானம் இல்லாத பெரும் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

27.09.90 வீரகேசரி

இஸ்ரேலிய உளவுப்பிரிவும் நிறுவனமான மொஸாட் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கும், இலங்கைப் பயங்கரவாத தாபனம் ஒன்றுக்கும் பயிற்சியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை பற்றி விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த 3 மாதங்களாக நிலவும் அமைதியின்மையின் போது 162 பேர் காணமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

28.09.90 தாயகம்

அதிகரித்துள்ள இராணுவச் செலவினம், தேசிய வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஆகியவற்றில் பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள இலங்கையரசு ஒக்ரோபர் மாதம் பரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 85 கோடிக்கு உதவி கோருமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த வருடம் இக் குழுவால் 75 கோடி டொலர் வழங்கப்பட்டது.

# "அகதிமுகாம் வாழ்வு இப்படியே நிரந்தரமாகிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் இலேசாகத் தோன்றியிருக்கிறது"

"இப்படியொரு அவலத்தை எமது வாழ்நாளில் என்றுமே நாம் கண்டதில்லை. அந்த இடம் மனிதர்கள் வாழும் இடமாக எமக்குத் தோன்றவில்லை. தூரத்தே நின்று பார்த்தால் ஏதோ பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றில் மக்கள் வெள்ளம் நிற்பதைப் போல தென்பட்டது. அருகில் நெருங்கிய போது அவர்களின் அழுகை ஒலத்தை எம்மால் தாங்க முடியவில்லை. எமது கால்களைக் கட்டிப் பிடித்து அந்த மக்கள் கதறி அழுத காட்சி இப்போதும் கண்முன்னால் நிற்கிறது"

கிழக்கில் வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதி முகாமுக்கு அண்மையில் சென்று திரும்பிய மட்டக்களப்பு செய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லக உயரதிகாரி ஒருவர் தனது அனுபவத்தை இவ்வாறு விபரித்தார்.

அகதி வாழ்க்கை வடக்கு — கிழக்கு மக்களுக்கு ஒன்றும் புதியதல்ல. ஆனால் இத்தனை அவலங்கள் நிறைந்த அகதி முகாம் ஒன்றை வாழ்நாளில் இதுவரை பார்த்தது இடையாது என்று புனர்வாழ்வு சேவைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் திடுக்கிடும் தகவல்களைக் கூறுகிறார்கள்.

கிழக்கு பகுதியைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் ஒருவர் தான் கண்ட காட்சியை இவ்வாறு விபரித்தார்:—

"பல நாட்கள் சுத்தம் செய்யப்படாத மலசலகூடம் ஒன்றினுள் நுழைவதைப் போன்ற அனுபவத்தை வந்தாறுமூலை அகதி முகாமிற்குச் சென்ற போது நான் உணர்ந்தேன். அங்கு தங்கியிருக்கும் 42 ஆயிரம் மக்கள் படும் வேதனை, பெண்களின் அழுகுரல்கள் எல்லாம் சேர்ந்து அந்த சங்கடமான நிலைமையை மறக்கச் செய்து விட்டன. மாதக்கணக்கில் ஒரே உடையுடன் வாழும் மக்கள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், பால்மாவுக்கு வழியில்லாத சிறு குழந்தைகள், உணவின்றி வற்றிப் போன கண்கள், நோயில் நலிவடைந்த மக்கள்... அவர்களின் வாழ்க்கையை விபரிப்பது கடினமானது. சிறுசிறு கொட்டில்கள் கட்டி வாழும் பரிதாப நிலைமை. போவோர் வருவோர் சற்று வித்தியாசமாகத் தென்பட்டால் அவர்களின் காலிலெல்லாம் விழுந்து கதறுகிறார்கள். "இந்த மண்ணில் பிறந்தது நாங்கள் செய்த குற்றமா? இந்த சோதனையை விட மரணம் பரவாயில்லை. எங்களைக் கொன்று விடுங்கள். வாழும் ஆசை போய் விட்டது" என்று ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் விசும்பி அழுதார். உண்மையில் இந்த நிலைமை தொடர்ந்தால் அந்த அகதிகளில் பலர் உயிரிழந்து விடக் கூடிய அபாயம் உள்ளது. பலருக்கு மனோ வியாதியே ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை"

அந்த நிருபர் விபரித்தவற்றின் சுருக்கம் இது. விபரிக்க முடியாத விடயங்கள் நிறைய உள்ளன. அகதிகளாக தங்கியுள்ள பெண்களின் அத்தியாவசிய அந்தரங்க தேவைகள், நிரந்தர நோயாளிகளின் மருந்துப் பிரச்சினை, எந்நேரமும் பாதுகாப்புக்கு உத்தரவாத மற்ற சூழ்நிலை உணவுத் தட்டுப்பாடு என ஏராளமான இன்னல்களை இந்த அகதிகள் எதிர் நோக்கியுள்ளனர்.

முன்னொரு போதும் இல்லாதவாறு தமிழ், முஸ்லிம் மக்கள் இரு தரப்பினரும் அகதிகளான இக்கட்டான சூழ்நிலை இப்போது தான் தோன்றியிருக்கிறது.

மோதல்கள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களைப் பார்த்தால் யுத்தம் முடிவடைவதற்கு முன்னர் பட்டினியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லும், நோயினாலும் அரைவாசி மக்கள் உயிரிழந்து விடுவார்களோ என்று அச்சமாய் இருக்கிறது.

வடக்கு – கிழக்கு பூராக உணவுத் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆனால் சில பிரதேசங்களில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் பஞ்சம், பட்டினி பற்றிய கதைகள் மனதை உருக்குகின்றன. குறிப்பாக மன்னாரில் பேசாலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் படுவான்கரை பிரதேசம், திருகோணமலையில் பல்வேறு கிராமங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கன.

வடக்கு – கிழக்கிலிருந்து பட்டினி பற்றிய செய்திகள் நாளாந்தம் வந்து கொண்டே இருக்கின்றன.

பேசாலை பகுதியில் மாத்திரம் 30 ஆயிரம் அகதிகள் உணவின்றி வாடுகின்றனர். அவர்களில் குழந்தைகள் சிலர் உணவு இன்றியே இறந்து விட்டனர். பலர் மிகவும் பலவீனமடைந்து போய் விட்டனர். இந்த நிலைமை மேலும் தொடருமானால் பேசாலையில் தஞ்சமடைந்துள்ள அகதிகளில் மேலும் பலர் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டி வரும் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

பேசாலையில் உள்ள அகதிகள் எல்லாம் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. பெரும்பாலானவர்கள் வவுனியா, திருமலை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். குண்டுத் தாக்குதல்களுக்குப் பயந்து தமிழ்நாடு செல்லும் எண்ணத்துடன் பேசாலை சென்று குவிந்தவர்கள்.

தங்களிடம் இருந்த பெறுமதியான சொத்துக்களையெல்லாம் அரைவாசி,கால்வாசி விலைக்கு விற்று விட்டு, படகுப் பயணத்திற்கு மட்டும் பணம் இருந்தால் போதும், முதலில் உயிரைக் காப்பாற்றிக் கொள்வோம் என்ற எண்ணத்தில் சென்றவர்கள் அவர்கள் ஆனால் இப்போது பலருக்கு அந்த நம்பிக்கை போய் விட்டது.

மன்னார் பகுதியில் ஏகப்பட்ட உணவுத் தட்டுப்பாடு. இடையில் பாதையும் துண்டிக்கப்பட்டு விட்டதால் அங்கு உணவுப் பொருட்களும் செல்லவில்லை. படகுப் பயணத்திற்கென கொண்டு சென்ற பணத்தைக் கொண்டு வயிறு நிரப்பத்தான் முடிந்தது. இனிமேல் கையில் பணமில்லை. வயிற்றுக்கு உணவுமில்லை. சொந்த இடங்களுக்குத் திரும்பவும் முடியவில்லை என்று அகதிகள் சிலர் தமது உறவினருக்கு எழுதிய கடிதங்கள் விபரிக்கின்றன.

குழந்தைகளின் நிலைமை மிகவும் பரிதாபமானது. பால்மா மருந்துக்குக் கூட இல்லை. ஏராளமான சிறுவர்கள் வயிற்றைக் கழுவிக் கொள்வதற்காக வீடு வீடாக பிச்சை எடுத்துத் திரிகிறார்கள்.

இது போதாதென்று நோய்த் தொந்தரவுகள் வேறு. வயிற்றோட்டம், காய்ச்சல், கண்

www.tamilarangam.net

நோய் என்று பலவித தொற்று வியாதிகள் அகதி முகாம்களில் பரவி வருகின்றன. உணவின்றி பலவீனப்பட்டிருக்கும் மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகளும் கிடைக்காததால் நோய்கள் சுலபமாகத் தொற்றி விடுகின்றன.

உடுத்த உடையுடன், வெறுங் கையுடன் வெளியேறிய பலர் வெட்ட வெளியிலேயே பல நாட்களைக் கழித்துள்ளனர். அகதி முகாம்களுக்குத் திரும்பிய பின்னரும் அநேகருக்கு இன்னும் தான் அரசாங்க உணவு நிவாரணங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

கல்முனை பிரதேசத்தில் இருந்து பீதியினால் இடம் பெயர்ந்து படுவான்கரை பகுதியில் தனது குடும்பத்துடன் தஞ்சமடைந்த ஆசிரியர் ஒருவர் தனது துன்பத்தைப் பற்றிக் கூறினார்.

"எமது பிரதேசம் வயல் வளம் நிறைந்தது. எமது வாழ்க்கையில் ஒருபோதும் கூட கடையில் நான் அரிசி வாங்கியது கிடையாது. நாங்களே நெல் உற்பத்தி செய்து உண்டு வாழ்ந்து வந்தோம். இன்று இப்படி அவல நிலைக்கு வந்து விட்டோம். அறுவடைக்குத் தயாரான எமது நெல் வயல்கள் இப்போது கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இது இப்படியே கருகிச் செத்து விடும் போல இருக்கிறது. இந்த வயல்களைப் பார்க்கும் போது இதயம் வலிக்கிறது"

இப்படிக் கூறினார் அவர்.

கிழக்கு மாகாணம் வயலும் வயல் சார்ந்ததுமான மருத நிலமாகும். அங்கே பெரும்பாலானவர்களின் குலத் தொழில் வேளாண்மைச் செய்கை.

மட்டக்களப்பு, அம்பாறை, தம்பலகாமம் பகுதிகளில் அறுவடைக்கு ஆள் இன்றி விளைந்த வயல்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

நவகிரிகுளத்தின் நீர்ப்பாசனம் தடைப்பட்டது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான வயல்களுக்கு நீர் வழங்கும் பிரதான குளம் இதுவாகும். அன்றுடன் பூட்டப்பட்ட நவகிரி குளத்தின் தூருசுக் கதவுகள் இன்னுமே திறக்கப்படவில்லை. நீர்பாசனத் திணைக்கள அதிகாரிகளோ, கமநலசேவை அதிகாரிகளோ அங்கு சென்று மீண்டும் நீர் வழங்க நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கிறது.

இலங்கையின் நெல் உற்பத்தியில் கிழக்கு மாகாணம் முக்கிய இடம் வகிக்கிறது. நெற் செய்கைக்கு அங்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து கிழக்கு மாகாணத்தை மாத்திரம் பாதிக்காது. நாடெங்கும் வீழ்ச்சியைக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை.

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான தமிழ் அகதிகளுக்கு இன்னும் நிவாணங்கள் கிடைக்கவில்லை. அங்குள்ள அகதிகள் இதுவரை உயிர் வாழ்ந்ததென்றால்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுநல ஸ்தாபனங்கள் வழங்கிய உணவுகள் மூலம் தான். திருகோணமலை மாவட்டத்தில் ஏறக்குறைய அனைத்து பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளனர். வெருகல் பகுதியில் மாத்திரம் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளனர்.

தற்போதைய நிலையில் அகதிகளுக்கென கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதில் மாத்திரம் பயனில்லை போல் தோன்றுகிறது. அவை எங்கெங்கு போய்ச் சேர வேண்டும் என்பதில் தான் முக்கியம் இருக்கிறது. கிழக்கைப் பொறுத்த வரை அகதிகள் தஞ்சமடைந்துள்ள பிரதேசங்கள் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. படுவான்கரை பிரதேசத்தில் வானத்தையே கூரையாகக் கொண்டு பல்லாயிரக்கணக்கான அகதிகள் வெட்ட வெளியில் சீவியம் நடத்துகின்றனர். உணவுப் பிரச்சினையுடன், இவர்களுக்கு பாதுகாப்புப் பிரச்சினை வேறு.

வாலிப வயதினர் தங்களது வீடுகளுக்கு வந்து செல்லவே அஞ்சும் போது அவர்களுக்கு உணவு எவ்வாறு கொடுப்பது என்று பெற்றோர் கூறுகின்றனர்.

கிழக்கு மற்றும் வன்னி பகுதியில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு மாத்திரம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாகச் சென்றுள்ளன. ஏற்கனவே குண்டுத் தாக்குதல்களுக்குப் பயந்து யாழ். குடாநாட்டில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து விட்டனர். குடாநாட்டில் சுமார் 350 அகதி முகாம்கள் உள்ளன. "ஒரு தீப்பெட்டியை 10 ரூபாவுக்குக் கூட அங்கு விற்கலாம். எல்லாப்பொருட்களுக்கும் தட்டுப்பாடுதான். எங்கிருந்து பொருட்கள் போவது? எப்படிப் போவது?" என்றார் வடக்கில் இருந்து வந்த ஒரு வயோதிபர்.


தற்போதைய நிலையில் சர்வதேச பொதுநல ஸ்தாபனங்களுக்கும், இங்குள்ள பொதுநல அமைப்புகளுக்கும் மனிதாபிமான ரீதியிலான ஒரு பெரும் பொறுப்பு இருக்கிறது. வடக்கு – கிழக்கில் அகதிகளாகியுள்ள மக்களுக்கு மிக அவசரமான உணவும், மருந்துகளும் தேவை. உரிய இடங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்வது. மனிதாபிமானம் கொண்ட அமைப்புகளால், உரைப்பட்டு செய்யப் பட வேண்டியதாகும். அங்குள்ள அகதிகளும் இத்தகைய உதவிகளையே இப்போது வேண்டி நிற்கின்றனர். முதலில் அப்பாவிகளின் உயிரைக் காக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டாக வேண்டும்.

— கீதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எண்பத்தி மூன்றின்
இறுதிப் பகுதி.
சுதந்திர நாட்டை
பிரிக்க முனைந்த
பயங்கரவாதியாம்.
தனிமைச் சிறையில்
தண்டனை எனக்கு.

இருளா? பகலா?
இரண்டிலொன்றுதான்.
இரண்டையும் இங்கே
பிரிக்க இயலா.

தனிமையென்றால்
தனிமை மட்டுமே.

சூரிய ஒளியும்,
தென்றல் காற்றும்,
இருந்தது நினைவில்
மறைந்தே போனது.

எத்தனை ஆண்டுகள்
இருக்கிறேன் உள்ளே.
காவலில் உள்ளவன்
நேரம் போக்க
கதைத்தவை மூலம்
நடப்பது இப்போ
நல்ல தொண்ணூறு.
வடக்கிலும், கிழக்கிலும்
எம்மவர் ஆட்சி.

தொடர்ந்தும் கேட்க
துடித்திடும் நெஞ்சு.
கேட்டால் உடனே
காட்டுக் கூச்சல்
போட்டுக்கொண்டே
காலால் உதைப்பான்.
தாங்கும் தெம்பே
இல்லாதிருப்பதால்
என்னையே அடக்குவேன்.

www.tamilarangam.net

எண்ணக் கோடுகள்
என்னுள் பரவ,
கற்பனைக் குருவி
சிறகை விரிக்கும்.
விடுதலைப் போரால்
விளைந்து கிடக்கும்
எங்கள் நாட்டால்
இறங்கி நடப்பேன்.

மாக்சிய அறிவு
முகத்திடை தெரிய,
தூக்கிய கருவி
தோளிடை சுமந்து,
நான் நேசித்த
மக்களிற்காக
சுதந்திரக் காற்றை
மீட்டுத் தந்த
வீர மறவர்கள்.
மறுபுறம் பார்க்க,
பள்ளிச் சிறுவர்கள்.
கல்லும், குழியும்
பரந்து கிடக்கும்
வீதியோரம்
பந்தையுருட்டும்
பாலர் கூட்டம்.

எண்பத்தி மூன்றின்
முன்பு போலவே.
எண்பத்தி மூன்றின்
முன்பு போலவே.

கற்பனை வானில்
விடுதலை பெற்று
எங்கோ திரிந்த
என்னை மீண்டும்
காவலன் கத்தல்
சிறைக்குள் இழுக்கும்.

இன்றுடன் உனக்கு
விடுதலை என்கிறான்.
விடுதலை எனக்கு?

நான் நேசித்த
மக்களைப் போன்றே
விடுதலை எனக்கு.
நாற்றமடிக்கும்
நான்கு சுவர்கள்
இனிமேல் தடுக்கா.
கரும் துருப்பிடித்த
இரும்புக் கதவுகள்
மறிக்காதென்னை.

சூரிய ஒளியில்
தென்றல் காற்றில்
சுதந்திரப் பறவையாய்
நடப்பேன் இனிமேல்.
நினைத்ததைப் பேசி
எழுத்தில் வடித்திட
என்னை இனிமேல்
எவரும் தடுக்கார்.

செருக்காய் எழுந்து
செல்கின்றேன் வெளியில்.
தேடிய ஒளியும்,
தென்றல் காற்றும்
இருக்கவே செய்தது.
இருட்டில் இருந்தே
பழகிய எனக்கு
கண்கள் உறுத்தி
நீரைச் சொரிந்தன.

விடுதலைக் காற்று வீசும்
என் மண்ணை
விரைந்து அடைகிறேன்.
ஒவ்வோர் மாந்தரும்
ஊமைகளாக,
பேசா மடந்தைகளாய்
செல்கிறார் இங்கு.
நானே விரைந்து
தடுத்து நிறுத்தி
கேட்கிறேன் சிலரை
இப்போ நாடு எப்படியுள்ளது?
உழைக்கும் மாந்தர்
எப்படி உள்ளனர்?

www.tamilarangam.net

கேட்டபின் கூட
யாரும் உரைத்திலர்.

அக்கம் பக்கம் பார்த்த
ஓர் சிறுவன்
அருகினில் வந்து
சிறுகவே சொல்கிறான்
பேசவும், எழுதவும்
உரிமைகள் உண்டு.
நாவும், விரல்களும்
சொந்தம் நமக்கில்லை.

விடுதலைப் போரை
நடத்துமவர்க்கே
மக்களும் சொந்தம்.
அதனால் இங்கே
எங்களுக்கான
சுதந்திரப் பேச்சை
அவர்களே பேச
மௌனித்திருக்கிறோம்.

பேச, எழுத சுதந்திரமுண்டு!
நகர்கிறான் சிறுவன்.

எத்தனை ஆண்டுகள்
மொத்தமாய் என் சிறை.

எண்பத்தி மூன்றின்
முன்பு போலவே.
எண்பத்தி மூன்றின்
முன்பு போலவே.

அடக்குமுறைகள்
கை மாறியுள்ளது.
அரசியல் மாற்றம்
எதுவுமே இல்லை.

●

செ.பாஸ்கரன்



www.tamilarangam.net

# நானும் மண்டையோடுகளும்

நான் கண் விழித்தேன்.

காலைப்பொழுதா அன்றி மாலைப்பொழுதா? நேரம் என்னதாயிருக்கும்? இப்படிச் சில கேள்விகளோடு வேறு சில கேள்விகளும்...

என்னயிது வாழ்க்கை சும்மா யந்திரத்தனமாகப் போய் விட்டதே!

காலை எழுந்ததும் வாழ்வைப் பற்றித்தாம் ஏக்கம். வாழ்க்கை எவ்வளவு தூரம் கனவாகப் போய்விட்டது.

நான் எழும்பிய நேரம் காலைப்பொழுதா? இல்லை. நடுப் பகற்பொழுது.

ஏன் நித்திரையை விட்டு எழுந்தேன்?

இப்படியொரு கேள்வி தினமும் என்னைத் துளைத்துக்கொண்டேயிருக்கிறது.

மனிதருக்கு, வாழ்க்கைக்கு உந்துசக்தி செயற்பாடுதானுமே இருக்காதா பின்னே!

ஒரு மனிதரை, அவர் சிந்தனை, செயற்பாடுகளை, மனத் துணிவை முடக்க வேண்டுமானால், அவரை எந்த வேலை வெட்டிக்கும் போகாதபடி பார்த்துக்-கொள்ளுவது முக்கியம்.

மீண்டும் கட்டிலில் விழுந்து கண்களை இறுக மூடிக் கொண்டேன். காலைப்பொழுது இல்லா விட்டாலும் எனக்கு அதுதான் காலை. ஆதலால் காலைக்கடன் பாக்கியிருக்கிறதே!

செலுத்த விருப்பமில்லை. ஏனிந்த கஞ்சல்தனம்?

செலுத்தினால்... மீண்டுப் குசினி..., அரிசி..., வெங்கா யம்..., என்னைத்தவர்களின் ச த்து..., பேச்சு...!!

எல்லாமே எனக்குப் போ து மௌனத்தின் தலையில் கோ டாரியால் கொத்துவது போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

இனியன்

ற ஒரு பிரமை?

கட்டிலில் புரண்டவாறு கண்களை இறுக மூடுகின்றேன்.

இருட்டு; திக்குத் தெரியாத இருட்டு.

எனக்குள்ளா? இல்லை வெளியிலா..?

கேள்வியோடு நேற்றைய நிகழ்வு இருட்டுத்திரையில் காட்சி உருப்பெறுகிறது.

"என்ன வல்ரர் இந்தக் குழியில் மண்டையோடு, எலும்புகள் அழியாமல் கிடக்கிறது?"

"இது பத்தாண்டுகளுக்கு முன் தாட்ட பிரேதக்குழி. நீ இதைப் பார்த்து பயப்படாதே"

எனக்கு வல்ரரின் தைரிய மூட்டல் விரக்திப் புன்னகையை வரவழைத்தது.

இருக்காதா பின்னே?

நானொரு இலங்கையனுச்– சே! மண்டையோடு, எலும்புகள். . . .

"ரங்கான் மண்டையோட்டை பார்த்துக்கொண்டிருந்தது போதும். அதை குழிக்குள் தள்ளி மூடு. யாரும் கண்டால் கூடாது"

கூடாதாம்!!

புதைகுழிக்குள் தங்கள் உறவினர்கள் உருச்சிதைவில்லாமல் வாழுவதாக எண்ணிப் பூங் கன்டுகள் நட்டும், தண்ணியூற்றியும், தினமும் வந்து மரித்த உறவினரோடு பேசிக் கொள்பவரும் இதை பார்த்தால் கூடாதாம்.

பிறகு எனக்கு வேலையுமில்லை. பூ உற்பத்தியிலும் வீழ்ச்சி. வியாபாரப் பிழைப்பிலும் மண்.

நான், பிரேதக் குழியில் பிரேதம் ஒன்று தாக்கப்பட்டு, மேலே குவிக்கப்பட்டிருக்கும் எஞ்சிய மண்ணை அள்ளிவிட்டு எரு மண் போடவேண்டும்.

அவ்வேலையைச் செய்வதற்கு முன் மீண்டும் வல்ரரிடம்..

"என்ன வல்ரர் இன்றைக்கு தாக்கின்ற பிரேதத்திற்குப் பூசை, அஞ்சலி ஒன்றுமில்லை. சுவாமிமாரைக்கூடக் காணவில்லை"

"செத்தவன் சமூக உதவி பெற்றுக்கொண்டிருந்தவன். உறவுகாரர் யாருமில்லை. அதனால் சுவாமிமார்கள் வந்து பூசை செய்து சவ அடக்கம் செய்ய சமூகஉதவி திணைக்களம் பணம்கொடுக்காது"

வல்ரர் தங்கள் அரசாங்கத்தின் செயல்களையும், மத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயல் முறைகளையும் கூறிவிட்டு நிமிர்ந்து என்னைப் பார்த்தார். நான் அவரை ஏறிட்டுப் பார்த்தேன்.

"ரங்கான், பணமில்லாதவருக்கு கடவுளிடம் கூட இடமில்லை. கடவுள் பணக்காரருக்கு மட்டுந்தான். அந்த மனிதனின்சவ அடக்கத்தைப் பற்றி இப்படித் தானே நீ எண்ணுகிறாய்?"

நான் மௌனமாக மண்ணை வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு சவ அடக்கம் நடப்பதைப் பார்த்தேன்.

அங்கு யாரும் இல்லை. சவக்குழியை வெட்டிய இரு தொழிலாளிகள் மட்டும் அந்தக் குழியில் சவத்தை இறக்கி மண் போட்டு மூடிக்கொண்டிருந்தார்கள்.

காட்சிகள் மறைந்து விட்டன.

நான் படுக்கையில் கிடந்து உழன்றுகொண்டு திரும்பி வலதுபக்கவாட்டுக்குப் படுக்க ஆயத்தமாகியபோது என் காதில் மெலிதாக "கலாச்சார மேம்பாட்டுக்கு.... கலாச்சாரத் திலிருந்து அந்நியப்படாமலிருக்க ..... நீங்கள் பங்களிப்பது நாட்டுக்குத்தான்..." போன்ற வார்த்தைகள் ஒலித்தன.

கண்களை அகல விரித்து அறையை பார்வையால் வட்டமிட்டேன்.

"என்ன மாதிரி? உங்கடை பங்களிப்பு எவ்வளவு? ஐம்பதா? நூறு?" கேட்டுக்கொண்டே எனது கட்டிலில் அமர்ந்து கொண்டார் ஜெகன். இயக்கத்திற்குக் காசு சேர்ப்பவர்.

நான் எதுவும் பேசவில்லை.

"நீங்கள் வேலையில்லாமலிருக்கிறபடியால் இருவது மாக் போடுங்கள்" பேரம் பேசினார் ஜெகன்.

"எங்கடை கலை, கலாச்சாரத்தை சிதையாமல் காக்க நாங்கள் புரட்சிகர கலாச்சார இசை நிகழ்ச்சிகள் செய்து காசு சேர்த்து நாட்டுக்கு, நாட்டு முன்னேற்றத்திற்காக அனுப்பிறம்!" வேறு நகரிலிருந்து ஜெகனுடன் வந்திருந்தவர் சொன்னார்.

எனது கண் முன்னால் எமது கலாச்சாரம் நர்த்தனம் ஆடியது. 'கிணற்றில் தண்ணி அள்ளாதே. நீ அள்ளினால் பாம்பு விழுந்து சாகும். நாங்கள் வாளியாலை அள்ளி ஊத்திறம். நீ கையில ஏந்திக் குடி"

'கோயிலுக்கு வர முடியாது. உங்களுக்கெண்டு ஒரு திருவிழா ஒதுக்குவம். வெளியிலை வைச்சுப் படையுங்கோ'

எனது காதில் பணம் பறிக்க வந்த இயக்கத்தவரின் பேச்சைவிட மேற்காட்டிய வசனங்களே பலமாக ஒலித்தன.

www.tamilarangam.net



www.tamilarangam.net

"எங்கள் கலாச்சாரம் தனித்தன்மையுடையது" மீண்டும் ஜெகன்.

"ஆமாம் உங்கள் கலாச்சாரம் தனித்தன்மையுடையது" இது நான்.

"நீங்கள் செய்யிற உதவியள் எந்த மூலைக்கு காணும்? போராளியளின்ரை ஒரு வேளை வயிற்றுக்கே காணாது" மீண்டும் ஜெகன்.

என் நினைவலைகளை மண்டையோடுகள், விலா எலும்புகள் இடுப்பெலும்புகள் ஆக்கிரமித்துக் கொண்டு என்னைப் பார்த்து.. "நீங்கள்தானே எங்களை அழிப்பதற்கு இயக்கங்களுக்குப் பணம் கொடுத்து உதவி செய்தீர்கள்?" என்று எள்ளி நகையாடுவதுபோல்..,பயங்கர ஒலி எழுப்பி நெருங்குவது போன்று ஒரு காட்சி புலனாகியது.

எனக்கு என்ன நடந்தது? மண்டையோடுகளும், எலும்புகளும் என்னையேன் பழிவாங்கவேண்டும் ஒருவேளை எனக்கு மனநோயா?

நான் கண்களை இறுகமூடி கொண்டேன்.

"என்ன பின்னேரம் நாலு மணிமட்டும் தூங்கிறீர். எழும்பும்" ஜெகன் என்னை விடுவதாக இல்லை.

"நீங்கள் இசை விழாவுக்கு வராட்டியும் ஒரு இருவது மாக் ரிக்கற் எடுக்கவேணும். தமிழ்க் கலாச்சாரத்தை காப்பாற்ற, வளக்க உதவி செய்ய வேணும்" வந்தவர்களில் ரிக்கற்றை கையில் வைத்திருந்தவர் கட்டாயப்படுத்தினர்.

எனக்கும், எனது குடும்பத்திற்கும் இயக்கம் பிரச்சினை தராமல் இருக்கவாவது நான் பணம் கொடுத்தாகவேண்டும் என்று நினைத்தபோதே மண்டைஓடுகள், விலா எலும்புகள் என்னைத் தாக்க ஓடிவருவதுபோலிருந்தது ●

"ஒரு இளைஞனின் ஏக்கம்" பற்றி...

அரசு தமிழ் மக்கள் மீது இராணுவப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் ஒவ்வொரு தடவையும் (புலிகள்) இயக்கத்தில் போராளிகள் அதிகரிக்கிறார்கள். இது எப்படி நிகழ்கின்றது என்பதை அறிந்து கொள்ள, இலங்கையிலிருந்து பாடசாலை மாணவர் ஒருவர் எமக்கு அனுப்பிவைத்துள்ள ஆக்கமே 22-ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

– ந.

www.tamilarangam.net

"தூண்டிலின் போக்கு...." (தொடர்ச்சி)

இது தவிர்க்க இயலாததே!

ஏனென்றால் வாழ்க்கையும் போராட்டமும் சக்திகளின் அணிசேர்க்கையோடு சம்பந்தப்பட்டு இயங்கின்றன. சக்திகள் ஒவ்வொரு திருப்பத்தின் போதும் தமது இடங்களை மாற்றுகின்றன.

பிரதான எதிரி இரண்டாவது எதிரியாகலாம். தீவிர நட்புச் சக்தி நம்பகமற்ற கூட்டாளியாகவும், நம்பகமற்ற கூட்டாளி நம்பகமான ஒருவராகவும் நிலைமை மாற்றங்களோடு மாறுபடும்.

ஆனால் மேற் குறித்த சிந்தனையானது இயல்பில் 'இயங்காத் தன்மை' கொண்டதாகும். எனவே அதன் கணிப்பீடு வெவ்வேறு விதமாகத் தோற்றம் காட்டியுள்ளது.

மூன்றாவது வகையினரில் ஒரு சார்புநிலை உண்டு. இது நடைமுறையை விளக்க, நியாயப்படுத்த முயலும் பிரிவாகும். இதுவும் இரண்டு, மூன்று என முகாம்களாகப் பிரிவுபட்டும், ஒன்று பட்டும் உள்ளது.

இப்போது இலங்கைக்கு வெளியே பத்திரிகைகள், சஞ்சிகைகள் நடத்திக் கொண்டிருப்பவர்கள் இந்த இரண்டு பிரிவினருமே.

இவற்றில் நாம் சொன்ன 'தூய்மைவாதப் போக்கு'டன் மட்டுமே எமது விமர்சன 'யுத்தம்' நடக்கிறது.

இது அடிப்படையில் 'தவறுகளை' உடைய போக்காக இருப்பினும், இன்று நடைபெறும் போராட்டம் ஒரு சரியான மூன்றாவது நிலையை இனங்கண்டுகொள்ளாதவரை பலவிதமான 'தேடல்' மனோபாவமுள்ள சக்திகளையும் இது உள்வாங்குகிறது. உள்வாங்குவதன் மூலமாகவே தன்னுள் போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கிறது.

அவற்றின் வெளிப்பாடுதான் இப்போது தூண்டில் மீது வைக்கப்பட்டுள்ள விமர்சனங்களும் ஆகும்.

எமது போராட்டத்திற்கான சரியான திசை வழியை முன்வைத்து, அந்த தொலைநோக்கில் விசயங்களை ஆராயத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ளாதவரை இது நீடிக்கவே செய்யும்.

எனவே தேவை எமது தேசிய விடுதலைப் போராட்டம் குறித்த சரியான முடிவுகளை வந்தடைவதற்கான திறந்த விவாதம் மட்டுமே. அது மட்டுமே தூய்மைவாதப் போக்கிலிருந்து (சிந்தனைத்துறையில் கற்பனாவாத ஆதிக்கத்திலிருந்து) விடுபட வாய்ப்பளிக்கும்.

உதாரணமாக இலங்கையரசு, புலிகள் இரண்டையும் எடுத்தால் யார் தமிழ் மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரி?என்று ஒரு கேள்வியைக் கேட்போம்.

5 வருடங்களுக்கு முன் இந்தக் கேள்வியைக் கேட்கத் தேவையில்லை. இன்று இதைக் கேட்கும்போது 'புலிகள்' என்ற பதிலைத்தர குறைந்த பட்சம் 25% ஆனவர்களாவது இருக்கிறார்கள் என்பது எமது அபிப்பிராயம். (போராட்டத்தில் அக்கறையுள்ளவர்கள் மத்தியில் கேட்பதைத்தான் குறிப்பிடுகிறோம்.)

இது எப்படி வந்தது? இதே கேள்வியை அரசு-ஈ.பி.ஆர்.எல்.எவ், அரசு- இந்தியா புலி-ஈ.பி.ஆர்.எல்.எவ், புலி -இந்தியா... என்று மாற்றிக் கேட்டாலும் சுவையான பதில்கள் வரும்.

வேண்டுமானால் தூண்டில் ஒரு ஆய்வு நடத்திப் பார்க்கலாம் !

உண்மையில் இலங்கை அரசும், புலிகளும் சமப்படுத்த முடியாதவை. ஒன்று பௌத்த சிங்கள பேரினவாதப் பாசிசஅரசு. ஒரு தேசிய இனத்தைத் திட்டமிட்டு அடையாளமற்றதாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு. அதற்கு அனைத்து அரசியல், இராணுவ வழிகளையும், உட்பிளவுகளையும் திட்டமிட்டு செய்யும் அரசு.

புலிகள் ஒரு சனநாயக விரோத பாசிச இயல்புகளைக்-கொண்ட ஒரு குழு. தமிழ்த்தேசிய இனத்தின் போராட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு குழு.

இதன் நடைமுறையையும், அரசின் நடைமுறையையும் சமனப்படுத்திவிட முடியாது.

ஆனால் இது தெளிவாகாததற்குக் காரணம் எமது போராட்டத்தின் செல்நெறி தெளிவில்லாதிருப்பதுதான்.

புலிகள்தான் அதற்குத் தடையாக உள்ளார்கள் எனக் கருதுபவர்கள்தான் இந்த 'அணி'யில் அதிகமாக உள்ள புத்திசீவிகள்.

ஆனால் அதற்கு அவர்களிடம் கூடச் சரியான விளக்கம் இல்லை. புலி அழிந்தால் ஒரு 'நல்ல இயக்கம் வரலாம்' என சிந்திக்கத்தான் அவர்களுக்கு முடிகிறதே தவிர ,அந்த 'வரப்போகும் இயக்கம்' எப்படி வளரும் என்பதற்கு ஒரு திட்டமும் இல்லை.

ஆக, பதில் முன்னரே - போல ஒரு 'புது இயக்கம்', 'தூய்மையான இயக்கம்' என்ற கனவு மட்டுமே சூக்குமமாக மனதில் உள்ளது. எதுவும் ஸ்தூலமாக இல்லை.

ஸ்தூலமாக இல்லாத அதை மனதில் வைத்துக்கொண்டு அதுவரை தடையாக இருப்பது புலிகள் எனக் கருதுவது சிரிப்புக்கிடமானதுதான்.

இது கிட்டத்தட்ட பழைய 'பக்கூனிஸத்திற்கு' * சமமாகும்.

உண்மையில் இது வழமையான ஒரு, ஏற்கெனவே இருப்பது போன்ற ஒரு இயக்கத்தை

www.tamilarangam.net

கட்ட நினைக்கிற போக்குத்தான்.

இதிலேயும் ஒரு உண்மை இருக்கிறது. இப்படி நினைப்பதை செய்ய முடியவில்லை என்ற ஆதங்கம் – அது புலிகளால் மறுக்கப்படுகிறது என்ற ஆத்திரம் – அடிப்படையில் ஒரு ஜனநாயகக் கோரிக்கையாகும். இது மறுக்கப்படுவதால் மேலும் மேலும் – புலி எதிர்ப்பு வளர்கிறது.

ஆனால் வாசகர்களில் பலர் பல விசயங்களை நடைமுறையுடன் ஒப்பிட்டு யோசிக்கிறார்கள். நடைமுறை மாற்றங்களே அவர்களை ஆகர்கசிக்கிறது. சிந்தனை மட்டத்தில் அல்ல. எனவே விமர்சனங்களை அந்த அடிப்படையிலேயே முன்வைக்கிறார்கள்.

ஆனால் எம்மைப் பொறுத்தவரை நாம் முதல் சொன்ன மூன்று அடிப்படைகளில் இருந்தே இந்த விமர்சனங்கள் எழுவதால் அவற்றை நிவர்த்தி செய்யும் விதத்தில் விசயங்களை முன்வைப்பது நல்லது.

நிவர்த்தி செய்வது என்பது ஒரு பரந்த விவாதத்தைத் தொடக்குவது. அதன் மூலமே அது தூண்டிலுக்கும், வாசகர்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினை என்ற விசயத்தை விளக்கவும், தேசத்திற்கும், மக்களுக்கும் தேவையான விசயத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்ற உணர்வை ஊட்டவும் முடியும் என நம்புகின்றோம்.

தூண்டில் ஆசிரிய குழு விரும்பியோ, விரும்பாமலோ தூய்மைவாத அணிக்குள் நுழைந்துள்ள ஒரு பகுதி என்பது எமது அபிப்பிராயம். அது ஒரு வரலாற்றுக் கறையல்ல; இன்றுள்ள ஒரே முற்போக்கு முகாம் அதுவாக இருப்பது எமது துரதிஸ்டம்தான். ●

பக்கூனிஸம் (BAKUNINSM): *

மிசயில் பக்கூனின் (1814-1876) என்ற ரசிய கிளர்ச்சியாளனின் 'அரசில்லாப் பொதுமை" (Collective Anarchism) என்ற கோட்பாடு பக்கூனிஸம் எனப்படுகிறது. இது வரையறைகளோ, படிமுறைகளோ அற்ற புரட்சி பற்றிய விதியாகும். பக்கூனின் தத்துவவாதியாக அல்லாமல் கிளர்ச்சிக்காரனாக இருந்தமையினால், நடவடிக்கைகளில் இருந்தே தீர்மானங்களை விருத்தியாக்கியது இதற்குக் காரணமாகும். இரகசிய, தலைமறைவு இயக்கங்கள் அவற்றின் கிளர்ச்சி, மக்களின் தன்னியல்பான எழுச்சி என்பவற்றைப் பக்கூனிஸம் முதன்மைப்படுத்துகின்றது. புரட்சிகர, தன்னியல்பான மக்கள் எழுச்சி சுயமானது. அவ்வாறான வெகுஜன இயக்கங்களில் புரட்சிகர இயக்கங்கள் அல்லது கட்சிகள் ஒரு குறித்த அளவு மட்டும் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற பக்கூனின் முடிவு "பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்" என்பதற்கும், "அதனை வழிநடத்தும் கட்சி" என்பதற்கும் மாறுபாடானது. மனிதர்கள் மீதான மனிதர்களின் அதிகாரத்தை மறுத்தும் மனித சுதந்திரமே அதியுயர்ந்தது, அதன் மீது அரசோ, நிர்வாகமோ இருக்க முடியாது என்பது "அராஜாங்கம்" – அரசில்லாமை (Anarchism) ஆகும்.

– ரூ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செங்குட்டான் பதில்கள்

? எமது மலையகத் தமிழ் மக்களை நாடுகடத்த அரசுஎடுத்த முடிவைப் பற்றி..?

குலம்

! பெருந்தேசிய இனவாதஅரசு சிறுபான்மை இனங்களின் நலன்கள் கருதி சரியான முடிவுகள் எடுத்ததாக இன்றுவரை இலங்கையில் எந்த வரலாறுமேயில்லை. இந்த நூற்றுண்டின் பச்சையான அடிமைத்தனத்திற்கு இந்த முடிவு மேலும் ஓர் எடுத்துக்காட்டு.

? பெண்களின் வளர்ச்சியைக் கண்டு சிலர் எள்ளி நகையாடுகிறுர்களே, அவர்களைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

குலம்

! அறியாமை கண்டு ஆத்திரப்படக் கூடாது. இந்த 'நகைப்பு' ஒரு சமூக நோய். வைத்தியம் இலகுவானதல்லவெனினும் பெண்களின் "அடுத்த கட்ட வளர்ச்சிகள்" இந் நோய்க்கு மருந்துகளாகும்.

? அராஜகத்தைச் செய்பவர்களை அராஜகவாதிகள் என்கிறேம். அப்படியாஞல் அவ் அராஜகத்தை ஆதரிப்பவர்கள் எத்தகையவர்கள்?

பா. நடேசன்

! அரோகராப் பாடும் பக்த 'கோடி'கள் போன்றவர்கள். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆளுவதை விரும்பும் இவர்களைப் போல் கையது கொண்டு, வாயது பொத்தி, கண்டுகொள்ளாம-லே இருப்பதுபோல் இருக்காமல் இப்பிடிக் கேள்விகள் கேட்டு... அய்ரோப்பாவிலும் அடிவிழும்போது ஆர் வருவார் அச்சோவே !!!

? கிழக்கு ஜேர்மெனி மேற்கு ஜேர்மெனியுடன் இணைந்ததன் மூலம் தாம் நல்ல எதிர் காலத்தைச் சந்திக்க இருப்பதாக மேற்கு ஜேர்மனி அரசியற் தலைவர்கள் கூறுகிறுர்களே?

பா. நடேசன்

www.tamilarangam.net

! அப்பட்டமான உண்மை. அங்கிங்கெனாதபடி இப்போது எங்கும் கடைவிரிப்பு. கொககோகோலா தொடக்கம் என்.ஏவாப்போ போன்ற நாஸிக் கட்சிகள்வரை அனைத்துமே கிழக்கிலும் தூசி தட்டியும், இறக்குமதியாகியும் ஜொலிக்கின்றன.

கட்டாய இராணுவ சேவை போன்ற சட்டங்கள் மூலம் இராணுவ ரீதியிலும், வார்சோ உடன்படிக்கையைப் பலவீனமாக்கியும், நேட்டோவைப் பலப்படுத்தியதுமான நடவடிக்கைகள் மூலம் அரசியல் ரீதியிலும், ஐரோப்பிய பொருளாதார சந்தையை பலப்படுத்தியது, சூழலை மாசுபடுத்தும் ஆலைகள் மீதான பொதுமக்களின் எதிர்ப்பை தவிர்க்க (கிழக்கு) பிரதேசம் கிடைத்தமை, புதிய பாவனையாளர்கள் உள்ளமை போன்ற பொருளாதாரரீதியிலும் அரசைப் பலப்படுத்தியுள்ளது அவர்களைப் பொறுத்தவரை நல்ல எதிர்காலத்தைத்தான் குறிக்கிறது. இவை மக்களுக்கு நன்மை தருமா என்பதை நீங்களே கண்டுகொள்ள-லாம்.

? இந்தியாவில் ஈ.பி.ஆர்.எல்எவ்.வைச் சேர்ந்த பத்மநாபாவும் மற்றும் 11 பேரும் புலிகளினால் கீழ்த்தரமாகச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு அங்கும் புலிகளின் ஆட்சி தானா?

பீ.கு

! இப்படியான 'நடவடிக்கை' களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பாக இந்திய மத்திய அரசினதும், தமிழ்நாட்டு அரசினதும் கடாட்சம் மாறி மாறி இயக்கங்களுக்கு கிடைப்பதுண்டு.

இலங்கையில் புலிகளை அழிக்க ஈ.பி.ஆர்.எல்.எவ்.வுக்கு கிடைத்ததைப் போன்று இந்தியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவை அழிக்க புலிகளுக்கு இக் கடாட்சம் கிட்டியுள்ளது.

தமிழ் இயக்கங்கள் தொடர்ந்தும் "எடுப்பார் கைப்பிள்ளைகளாக" இருப்பதையே இந் நடவடிக்கைகள் நிரூபித்துவருகின்றன.

---


படிப்படியான நகர்வில், அவசியமானபோதில் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. பரதேசி போய் செங்குட்டான் வந்திருக்கிறார். கேள்விகளை நீங்கள் தொடர்ந்தும் அனுப்பி வையுங்கள்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நலம் கேட்கும் நிலையில் நாம் இங்கு இல்லை.

ஆக்கிரமிப்பும், அவலங்களும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. பழைய மாகாணசபைக் கூட்டங்களான ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோவினர் இப்போது இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து காட்டிக் கொடுக்கிறார்கள். பெண்கள் என்றுகூடப் பார்க்காமல் பிடித்து அடித்து ஆக்கினை செய்கிறார்கள். ஆட்களைக் கடத்துகிறார்கள்.

செல், பொம்பர் வீச்சு, துவக்குச் சூடு என இறந்தவர் போக இப்போது திரைமறைவில் ஆட்கள் காணாமற் போகிறார்கள். நினைத்துப் பார்க்கும்போது ஒரே கவலையாக உள்ளது. எத்தனை மக்களின் உயிர்களும், உடைமைகளும் பறிபோய் விட்டன?!

இங்கு மக்கள் குழுவைத் தெரிவுசெய்து பிரச்சினைகளைப் பொலிசுடன் சேர்ந்து தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதன்போது பலர் இராணுவத்தினரின் கட்டுமீறிய தீ வைத்தல் கொள்ளையிடல், நாசமாக்குதல் பற்றிக் கேட்டார்கள். அதற்கு எஸ்.பி. கூறுகிறார்:

"வடக்கு, கிழக்கில் இப்போது இராணுவ ஆட்சி நடக்கிறது. இராணுவத்தினரை நாம் ஒன்றும் செய்யமுடியாது. அரசாங்கம் அவர்களுக்கு முழு அதிகாரங்களையும் வழங்கியுள்ளது. ஆனால் எம்மால் இயன்ற உதவிகள் செய்வோம். எம்மிலும் எல்லோரும் ஒரே மாதிரி அல்ல"

(தொடர்ச்சி 56 ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொலையும் குறும்பு எனப்படும் இயலும்



வீர அஞ்சலிகளினூடு குளிர்காயும் 'அரசியல் பண்பாட்டில்' புடம்போடப்பட்ட வாசகர்களிற்கு ஜெயந்தீஸனின் "கொலை" "ரசனை"யை ஊட்டியிருக்காது என்பதில் எந்தச் சந்தேகமுமேயில்லை.

தூண்டில் கலம் 33 இல் வெளிவந்த கே.காந்தனின் - "கொலை சுத்த அறுவை" என்ற அபிப்பிராயம் - ரசனை, வாசிப்பு இவைகள் பற்றிய அறியாமைக்குள்ளும், நெருக்கடிக்குள்ளும் வாழும் இந்திய உப கண்டத்து இலக்கிய பிம்பத்தின் இன்னொரு பிரதிபலிப்பே. காந்தன் இரண்டு வரிகளிலாவது தனது அபிப்பிராயத்தை நிரூபித்திருப்பாராயின் அது நாணயமாக இருந்திருக்கும்.

எனவேதான், எந்தவிதவிஞ்ஞான பின்புலங்களையும் கொண்டிருக்காத இந்த ஒரு வரியை மறுதலித்து "கொலை" ஒரு தரமான சிறுகதை என்பதை நிரூபிக்க பல வரிகளை எழுதவேண்டியது எனக்கு அவசியமாகப்படுகிறது.

குறும்பியலிற்கூடாகப் பின்னப்பட்டிருக்கும் "கொலை" வாசகர்களைச் சிரிக்க வைப்பதற்காக மட்டும் எழுதப்பட்டதொன்றல்ல. குறும்பு: மறைமுகமாக மானிட தத்துவ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது.

கொலையில் இழையோடும் குறும்பு குறியீடுகளுடன் மட்டும் சம்பந்தப்பட்டு நிற்கவில்லை. இது சமூக அவலங்களின் உக்கல்களிலிருந்து தலை நீட்டி ஆடும் நாகத்தின் நடனம். இந்த நாகத்தை ஆட்டிய பாம்பாட்டியே கதையை எழுதியவன். நாகத்தின் நடத்தினூடு கிடக்கும் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளுதல் என்பது வாசிப்புப் பெறுமானத்துடன் சம்பந்தப்பட்டஒரு சமாச்சாரம்.

கதையுள் கதை எழுத வெளிக்கிடும் பாத்திரம் கதை எழுதித் தருமாறு "கட்டளை"யிடும் பத்திரிகாசிரியனின் அடிமையல்லன். அடிமையாக இருந்திருப்பின் "வீரகாவியம்" படைத்திருப்பான். ஆனால் நிர்ப்பந்தத்தின் கைதியாக வரும் அவன் நிர்ப்பந்தத்தின் கைதிகளாகியுள்ள அனைத்து அப்பாவிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறன். நிர்ப்பந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தத்தை ஏற்றல் என்பது அவனது பொருளாதார வறுமையுடன் சம்பந்தப்பட்டது. அவன் மனிதாபிமானவாதி.

".. நான் கொலைஞன் அல்லன். வாய் பேசாத பிராணிகளைக் கூட இன்றுவரை நான் கொன்றதேயில்லை. கொலை செய்ய எனக்கு விருப்பமில்லை"

".. ஒரு சிறுகதையெழுது, முடிவில் கதாநாயகனையோ கதாநாயகியையோ கொன்று விடு. இல்லையேல் சீட்டுக் கிழித்துவிடுவேன் என்று கட்டளையும் வோர்னிங்கும் பிறப்பித்து விட்டார்.."

## சகுன்

".. கொலையில் எனக்கில்லாத உடன்பாடு இலக்கியத்திலுண்டு.."

இந்தச் சிலவரிகள் பாத்திரத்தின் பொருளாதார நெருக்கடியையும், மனித நேசத்தையும் காட்டுவன.

எழுத்து என்னும் " பிரம்மாக்களின்" உலகில் எவ்வாறு தனிமனிதனது அடிப்படையுரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதை பொதுக் கருவாகக் கொண்டுள்ள இச் சிறுகதை இந்திய உபகண்டத்தில் கொலை என்னும் கொடூரம் புதுப் புதுப் புனர் ஜென்மங்களைப் பெற்றுள்ளது என்பதை, கதை நகர்த்த எடுத்துக்கொண்ட உத்தியின் ஒவ்வொருகட்டங்களிலும் துல்லியமாகக் காணமுடிகிறது.

முன்புபோல இப்போதும் ஹீரோயிஸக் கொலைகள் காதலில் மிகவும் மலிந்து போயுள்ளது என்பதை "எனக்குத் தெரிந்த பெடியன், எனக்குத் தெரிந்த பெட்டை" களின் காதலிலிருந்து புரிந்துகொள்ளலாம். இதனூடு கொலையை நிராகரிக்கும் பாத்திரம் இன்னொரு கருவை தேடி ஓடுகிறது.

1980களின் பின் எழுந்த வக்கிரமான "துப்பாக்கிக் கலாச்சாரத்தில்" இலக்கியவாதிகளில் கணிசமானோர் குறுகிய தேசியவாத அரசியல் முகாம்களின் ஆஸ்தான எழுத்தாளர்களாக மாறி இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை வளர்ப்பதற்கு எதிராக இருந்தனர். இவர்களது உணர்வுகள் "மனிதம்" பற்றிய பரந்த தத்துவத்தில் காலூன்றவில்லை.

ஜெயந்தீஸனின் "கொலை" எமது அரசியல் ஆர்பாட்டங்களின்மீது வைக்கப்பட்ட விஞ்ஞான பின்புலன்களைக்கொண்ட ஒருவிமர்சனம்.

குறும்மை "முசுப்பாத்தியாக" எடுப்பவர்கட்கு இந்த விமர்சனத்தின் அடி அத்திவாரங்கள் மங்கலாகக்கூடத் தெரியுமா என்பது சந்தேகமே.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "மூன்றாவது நிலை!"

"இது தமிழர்களுக்கு எதிரான யுத்தமல்ல, புலிகளுக்கெதிரான யுத்தம்" என்ற கோசத்துடன் இலங்கை இனவாத அரசின் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மும்முரமாக நடைபெற்று கொண்டிருக்கின்றன.

அரசபடைகளின் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள், கெலி தாக்குதல்கள், பீரங்கித்தாக்குதல்கள், செல்லடி, கடத்துதல், உயிருடன் கொளுத்துதல், சித்திரவதை செய்தல், கைது செய்தல் எதுவுமே நிறுத்தப்படவில்லை. இவை புலிகளுக்கு எதிராகவேயொழிய தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல என்று இலங்கை அரசு கூறி வருகிறது!

அரசின் பொருளாதாரத்தடை, உணவுப்பொருட்கள்தடை மருந்துப்பொருட்கள் தடை, போக்குவரத்துத்தடை எதுவுமே நீக்கப்படவில்லை. இவை தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல என்று இலங்கை அரசு கூறுகின்றது!!

அகதிகள் தஞ்சமடைந்துள்ள முகாம்களைத் தாக்குதல், பாடசாலைகள், வைத்தியசாலைகளைத் தாக்குதல், இவற்றுக்குள் புகுந்து அகதிகள், ஊழியர்களைக் கைது செய்தல், கொலை செய்தல் தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல என்று இலங்கையரசு கூறுகிறது!!

அரச குண்டர் படைகள் மூலம் பெரிதாக்கப்பட்ட பகைமையைப் பயன்படுத்தி முஸ்லீம் ஊர்க்காவற்படை என்ற பெயரில் முஸ்லீம் இளைஞர்களை ஆயுதபாணிகளாக்கி அவர்களை கொலை, கடத்தல்களில் ஈடுபடுத்தி வருவது தொடர்கிறது. இதுவும் தமிழர்களுக்கு எதிராக அல்ல என்பதே இலங்கையரசின் விளக்கம்.

இலங்கையரசின் இந்த விளக்கங்களுக்கூடாக சேகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் "தேசிய பாதுகாப்பு" நிதி 120 கோடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பணம் இலங்கை மக்களிடமிருந்தே பெறப்படுகிறது என்பதுடன் இந்தப் பணச் சேகரிப்பினூடு பெருந்தேசிய இனவாதம் வளர்த்தெடுக்கப்படுகிறது என்பது முக்கியமானது.

www.tamilarangam.net

"இலங்கையை காப்பாற்றுவோம்" என்ற பெயரில் தினமும் இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தென்னிலங்கையில் ஜே.வி.பி அழிப்பு நடவடிக்கைகள் என்ற போர்வையில் சிங்கள மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவப் பயங்கரவாதத்தால் அரசுக்கும், அரச படைகளுக்கும் எதிரான நிலை எடுத்திருந்த சிங்கள மக்களில் பலர் "வடக்கு, கிழக்கில் பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராடும் எமது படையினருக்கு எமது வாழ்த்துகள்" என்று தெருக்களில் சுவரொட்டிகள் ஒட்டி ஆதரவளிக்குமளவிற்கு பெருந்தேசியவாத யந்திரம் நன்றாக முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஏனைய சிங்கள, தமிழ், முஸ்லீம் கட்சிகள், இயக்கங்கள் என்ன நிலையை எடுத்துள்ளன?

நவசமசமாஜக்கட்சி போன்ற ஒன்றிரண்டு இடதுசாரிக் கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள், இயக்கங்கள் யாவும் "புலிகளை அழிக்கவேண்டும். புலிகளை அழிக்கும் அரசின் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு தருவோம். ஆனால் மக்களை கொல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!" என்று அரசின் நடவடிக்கைகளுக்குள் பலத்தையளித்துக் கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்பு அமைச்சரே, "முன்பு அரசுக்கு பல எதிரிகள். இப்போது புலிகள் மட்டுமே எதிரிகள்" என்று தமது நண்பர்களை அடையாளம் காட்டியுள்ளார். புலிகளை அழிக்க அரசுக்கும், அதன் கூட்டுகளுக்கும் என்ன அருகதையுண்டு என்பதைவிட "மக்களைக் கொல்லாமல்.." என்று இந்த இயக்கத் தலைமைகள் அரசுக்கு 'அங்கீகாரம்' வழங்குவதானது மரங்களை வெட்டாமல் பார்த்துக்கொண்டு காட்டை அழியுங்கள் என்பதை ஒத்ததே.

இன்றைய யுத்தத்தில் இரண்டு நிலைகள் தெரிகின்றன. ஒன்று மேலே குறிப்பிட்டுள்ளபடி அரசினதும், அதன் ஆதரவுக் கும்பல்களினதும் மக்களுக்கு எதிரான நிலை. இரண்டாவது இவர்களை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும் புலிகளின் நிலை. அரசபடைகளை தடுத்து நிறுத்த புலிகளின் போராளிகள் பலத்த உயிரிழப்புகளுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில், எதிரிகளால் தாங்கள் அழிக்கப்படுக்கொண்டிருக்கும்போது, இராணுவத்தை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும் புலிகளுடன் மக்கள் இணைந்துகொள்வது தவிர்க்கமுடியாததாகிறது. அப்படியான பெரும்பாலான மக்களின் பங்களிப்பு புலிகளுக்குக் கிடைக்கிறதா? மக்கள் புலிகளுடன் இணைந்து நிற்கிறார்களா?

www.tamilarangam.net

இலங்கை கடற்படைகளினால் கடலில் போடப்பட்டிருக்கும் கடற்கண்ணி வெடிகளையும், ஆகாயவழித் தாக்குதல்களையும், நடுக்கடலில் ஏற்படும் விபத்துகளையும் எதிர்கொண்டு ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கில் அகதிகள் இந்தியாவுக்குப் போய்க் கொண்டிருப்பதும்,

புலிகளின் தடையுத்தரவால் குடாநாட்டைவிட்டு வெளியேற முடியாமலிருந்த மக்கள் அந்தத்தடை குறுகிய காலத்திற்கு தளர்த்தப்பட்டிருந்தபோது ஆயிரக்கணக்கில் குடாநாட்டைவிட்டு கொழும்புக்கு வந்ததும்,

கிழக்கு மாகாணத்திலுள்ள அகதி முகாம்களுக்கு பார்வையிடச்சென்ற பாராளுமன்றத் தூதுக்குழுவினரையும், பாதுகாப்பு அதிகாரிகளையும் அங்கிருந்தோர் கட்டிப்பிடித்து அழுது தமது பிள்ளைகளைக் காப்பாற்றுமாறு கோரியதும்,

புலிகளுடனான மக்களின் இணைவு, பங்களிப்பு பற்றிய கேள்விகளுக்கான பதிலைத் தருகின்றன. இதற்குரிய காரணங்கள் என்ன?

ஆரம்பகாலம் முதல் இன்றுவரை புலிகளின் தலைமை கடைப்பிடித்துவரும் பாசிசப் போக்கே பிரதான காரணியாகிறது. போராடும் உரிமை தமக்கே என்ற 'கொள்கை'யில் சக விடுதலை இயக்கங்களைத் தடைசெய்தமை, அந்த இயக்கங்களில் இருந்த உண்மையுள்ள போராளிகளை ஈவிரக்கமின்றி கொன்று குவித்தமை, இதனால் பல போராளிகளை போராட்டத்தில் இருந்து ஒதுங்கவைத்தமை அல்லது பாதுகாப்புக் கருதி தற்போது எதிர் நிலைப்பாடெடுத்திருக்கும் தலைமைகளின் கீழேயே தொடர்ந்தும் இருக்க வைத்தமை, வெகுஜன அமைப்புகளைத் தடைசெய்தது, மரணதண்டனைகள் என்ற பெயரில் மாற்றுக் கருத்துக்கொண்டவர்கள், விமர்சிப்பவர்கள், பொதுமக்களைக் கொலை செய்தமை, இப்போது சொந்த மக்களையே - 4,000க்கும் மேற்பட்டோரை - கைதிகளாக்கி மிருகத்தனமான முறையில் சிறையில் அடைத்து சித்திரவதை செய்கின்றமை போன்றவற்றுடன் இலங்கை, இந்திய அரசுகளுடன் கள்ளக் கூட்டுகள் வைத்திருக்கின்றமை போன்ற 'அரசியல்' நடவடிக்கைகளும் போராட்டத்திற்கான மக்களின் பங்களிப்பை துண்டித்ததுடன், பலரை - மௌனமாக்கியும், ஏனையோரைத் தப்பியோடவும், அந்நியப்படவும் வழிவகுத்ததுடன் புலிகளுடன் சேர்வது என்பதையே நினைத்துப் பார்க்க முடியாதளவிற்கு கொண்டுவந்துள்ளது.

அத்துடன் இலங்கையரசின் தற்போதைய நெருக்கடிகளும், "இந்தியா இலங்கையில் ராஜதந்திர ரீதியில் தலையிட வேண்டும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற புலிகளின் தலைமைகளின் கோரிக்கைகளும், "புலிகளும், இலங்கையரசும் சேர்ந்து கேட்டால் நாம் மத்தியஸ்தம் வகிக்கத் தயார்" என்று இந்திய மத்திய அரசு கருத்து வெளியிட்டிருப்பதும், மீண்டும் இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்புக்கு வழியமைக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளன.

அப்படியானால் இன்றைய நிலைமையில் எந்த நிலையை எடுப்பது? எந்தப் பக்கம் சார்ந்து நிற்பது? அல்லது உயிர் தப்பியிருத்தல் என்பது மட்டுமே யதார்த்தமாகுமா?

புலிகளை அழித்தல் என்ற பெயரில் தமிழ் மக்களை அழிக்கும் அரசினதும், அதனை ஆதரிக்கும் சிங்கள இனவாத, தமிழ் மிதவாத அரசியல் கட்சிகளினதும், சோரம் போன இயக்கங்களினதும் நிலை மக்கள் நலன்களுக்கு எதிரானது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

மக்களில் ஒரு பகுதியினர் அரச பயங்கரவாதத்தை எதிர்க்க புலிகளில் சேர்ந்துகொண்டிருந்தாலும் பெரும்பாலான பகுதியினர் "செம்மறியாடுகளைப்போல மக்களை நடத்தும் புலிகளுடன் செம்மறியாடுகள் எப்படிக் கூட்டுச்சேர முடியும்?" என்ற நியாயபூர்வமான கேள்வியுடன், எந்த ஆதரவும், நிவாரணமும், பாதுகாப்பும் இல்லாமல் மரணத்துள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது புலிகளின் நிலையால் ஏற்பட்டது.

அப்படியானால் இந்த இரு நிலைகளையும் தவிர்த்து, மக்கள் நலன்களை முதன்மைப்படுத்தும், மக்களின் பங்களிப்புடனான "மூன்றாவது நிலை" ஒன்று உருவாகவேண்டியது அவசியமல்லவா?

தற்போதைய மரணச் சூழ்நிலையில் இது எப்படி சாத்தியமாகும்? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதவையாகின்றன.

இந்த மூன்றாவது நிலை உருவாகும்வரை யுத்தங்களும், அதனைத் தொடர்ந்த யுத்தநிறுத்தக் கோரிக்கைகளும் மாறி மாறி வந்துகொண்டிருக்கும் அவலத்தை நிறுத்த முடியுமா?

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஒக்ரோபர் 1990 கலம் : 34

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மனி: 6 மாதங்கள் - 20,- டி.எம்
1 வருடம் - 38,- டி.எம்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் - 25,- டி.எம்
1 வருடம் - 48,- டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் - 45,- யு.எஸ்.டொலர்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபால் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆறுதல் சொல்வாரும் இல்லை. ஒரே அவலம். குரல் கொடுப்பதற்குக்கூட யாரும் இல்லை. இப்படியே தொடர்ந்தால் மக்கள் ரொம்பக் கஷ்டங்களை அனுபவிக்க நேரும். தற்போது தற்காலிக அமைதி தேவை.

சிங்களக் குடியேற்றங்கள் பழையபடி தொடர்கின்றன. என்னமாய் இருந்த தமிழர் நிலையை இப்படி அழித்துப் போட்டாங்கள். இனிமேல் எப்படி அமையுமோ?

கொஞ்சக்காலம் சனங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் திரிந்தார்கள். "இராணுவ ஆட்சி" என்பது பற்றி இப்போது அனுபவத்தில் அறியக்கூடியதாக உள்ளது. ஒரே அவலம். இரவு படுதென்றால் ஒரே நாய் குலைப்பும், வெடிச் சத்தமும்தான்.

மரணத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 13.06இல் தொடங்கிய யுத்தம் இன்னும் அமைதிப்படவேயில்லை. சதா கொள்ளையடிப்பு, கொலை, வெட்டுக்குத்து நடந்தவண்ணமேயுள்ளது. இரவு வரப் போகிறதென்றால் ஒரே பயம்.

எங்கள் இடத்தில் 500-600பேர் மட்டில் தெரிந்தள ல் செல், பொம்பர், சூடு என் வற்றில் இறந்துள்ளார்கள். ஆய கணக்கானோர் உடைமைகளை ழந்துள்ளார்கள்.

இராணுவ ஆட்சியில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பயந்து, பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சுற்றிவர இராணுவம் சென்றி போட்டிருக்கிறது. நடுவிற்குள் மரணத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

எங்களைப் பற்றி ரொ பவும் கவலைப்பட்டாய். யார் கவலைப்பட்டென்ன? எம்முடைய அவலங்கள் எமக்குத்தானே.

.........

26.07.90

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்